Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
TILKO
❖ திருமண மண்டபம்
❖ திருமண மண்டப அலங்காரம்
❖ மணப்பெண் அலங்காரம்
❖ திருமண கார் சேவை
❖ Honey moon room
(C/2278)
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 தை 02 செவ்வாய்க்கிழமை (15.01.2013) பக்கங்கள் 20 ஓசை – 107














# புதிய பிரதம நீதியரசர் யார்? இறுதி முடிவு இன்று தெரியும்

(கொழும்பு)

இலங்கையின் 44 ஆவது பிரதம நீதியரசரை தெரிவுசெய்வதற்கான நாடாளு மன்ற பேரவையின் கூட்டம் இன்றைய தினம் இடம்பெறவுள்ளதாக இக்கவுன்சி லின் உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரி வித்துள்ளார்.

பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்கவை ஜனாதிபதி நீக்கி யுள்ளதாகத் தெரிவித்து அவருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் நாட்டின் அடுத்த பிரதம நீதியரசர் யாரெ ன்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில் 18 ஆவது திருத்த சட்டமூலத்திற்கமைய ஸ்தாபிக்கப்பட்ட நாடாளுமன்ற பேரவையின் கூட்டம் இன்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் பிரதம நீதியரசர் பொறுப்புக்கு வரக்கூடியவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பரிந்துரை செய்கின்றவரின் பெயர் பரிசீலிக்கப்படவுள்ளதாக இக் கவுன்சிலின் உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் பி.பி.சி.யிடம் தெரிவித்துள்ளார்.

ஐந்து பேர் கொண்ட இந்த நாடாளு மன்ற கவுன்சிலுக்கு நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தலைவராக அமைந்துள்ளார்.

பிரதமர் தி.மு.ஜயரட்ண, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்க

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஐ.தே.க. கலந்துகொள்ளாது

(கொழும்பு)

புதிய பிரதம நீதியரசரை தெரிவு செய்வதற்காக இன்றைய தினம் இடம் பெறவுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்தில் கலந்துகொள்ளப்போவ தில்லை என ஐ.தே.க. அறிவித்துள்ளது. இது தொடர்பாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேரவை யின் உறுப்பினர்களில் ஒருவருமான டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளதா வது,

நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட் டத்தில் கலந்துகொள்ளுமாறு எங்க ளுக்கு உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. என்றாலும் நாங்கள் அந்த பேரவைக்கூட்டத்தில் பங்கேற்கமாட்டோம் எனத் தெரிவித்தார்.

## பதவியிலிருந்து விலக மறுக்கிறார் ஷிராணி



(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா, தனது பதவி விலகல் கடிதம் கிடைக்கப் பெற்ற போதும், அப்பதவியிலி ருந்து விலகுவதற்குத் தயா ரில்லை என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி ஷிராணி பண்டார நாயக்காவே தற்போதும் பிரதம நீதியரசர் என்ற வகையில் அவர் தனக்கான பாதுகாப்பை உறு திப்படுத்துமாறு சட்ட ரீதியாக பொலிஸ்மா அதிபரிடம் கோரி க்கை முன்வைத்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

தன் மீதான குற்றப் பிரே ரணை மற்றும் பதவி நீக்கம் செய்யப்பட்டமை சட்டவிரோ தமானது என சர்வதேச ரீதியாக கண்டனங்கள் எழுந்துள்ள நிலை யில் அவர் பதவி விலகலை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளதாக

(19) ஆம் பக்கம் பார்க்க

## நீதித்துறையை உதாசீனப்படுத்தி அரசியல் இலாபம் காண்பது யார்?

### கேட்கிறார் ஜனாதிபதி

நீதித்துறையை உதாசீனப் படுத்தி அரசியல் இலாபம் காண்பது யாரென ஜனாதிபதி கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் நேற்றுக் காலை அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கேள்வியெழுப் பியதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது நீதித்துறை முகங்கொடுத்துள்ள பல பிரச்சினைகள் குறித்து கலந் துரையாடப்பட்டது.

நீதித்துறையை உதாசீனப்படு த்தி அரசியல் இலாபத்தை பெற் றுக் கொள்ளும் குழுவை இனங் காண்பது அத்துறை சார்ந்த அனைவரதும் பொறுப்பாகு மென ஜனாதிபதி இந்தச் சந்திப் பின் போது தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நீதித் துறையில் ஏற்பட்டுள்ள எந்த வொரு பிரச்சினைகளுக்கும் தமது சங்கத்திற்கும் தொடர் பில்லை என இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் இந்தச் சந்திப் பில் தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் நீதியமைச்



சர் ரவூப் ஹக்கீம், வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதி பதியின் செயலாளர் லலித் வீர துங்க மற்றும் ஐ.தே.க. நாடாளு மன்ற உறுப்பினரும் சட்டத்தர ணிகள் சங்கத் தலைவருமான விஜேதாஸ ராஜபக்ஷ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## நீதிமன்ற நடவடிக்கைகள் இன்று முதல் வழமைக்கு

### சட்டத்தரணிகள் சங்க செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதாக கூறிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றப்பிரேரணை தொடர்பில் எத னையுமே தெரிவிக்கவில்லை என்பதுடன் நீதிமன்ற நடவடிக்கைகள் இன்று முதல் வழமைபோல செயற்படுமென இலங்கை சட்டத் தரணிகள் சங்கத்தின் செயலாளர் சஞ்ஜய கமகே தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையிலான நீதிமன்ற வலயம் 11 சேர்ந்த நிறைவேற்றுக்குழுவின் அங் கத்தவர்கள் 30 பேர் அடங்கிய உறுப்பினர்களுக்கும் ஜனாதி பதிக்கும் இடையில் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற சந் திப்பு தொடர்பில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் கோர விபத்து; குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி

### மேலும் மூவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற இருவேறு வீதி விபத்துக்களில் ஒருவர் ஸ்தலத் திலேயே மரணமடைந்துள்ளார். மேலும் மூவர் படுகாயமடைந் துள்ளனர்.

யாழ். நகரிலிருந்து புறப்பட்ட பயணிகள் பஸ் வண்டி ஒன்று பரந்தன் சந்திப் பகுதியில் மதி யம் 1.00 மணியளவில் மோட் டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது. இச்சம்ப வத்தின்போது மோட்டார் சைக் கிளில் சென்ற இருவரும் படு காயமடைந்தனர்.

மேற்படி காயப்பட்ட:

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசாங்கத்தை கவிழ்ப்பதே நீதித்துறை நெருக்கடிக்கு தீர்வு

### என்கிறார் ரணில்

(கொழும்பு)

நீதித்துறை தொடர்பான தற்போதைய நெருக்கடியை தீர்ப்பதற்கு இருக்கின்ற ஒரே யொரு வழி இந்த அரசாங் கத்தை கவிழ்ப்பதேயாகும். அதற் காக உங்கள் தலைமையை வழங்குங்கள். என்று சட்டத்தர ணிகளிடம் எதிர்க்கட்சித் தலைவ ரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்ரம சிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய சட்டத்தரணிகள் சங் கத்தின் உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பு கட்சியின் தலை மையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்று இடம்பெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தை ஆரம்பத்தில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தாய்ப்பால் புரைக்கேறி உயிரிழந்தது குழந்தை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை, காக்கைதீவுப் பகுதியில் தாய்ப்பால் புரைக் கேறி இரண்டு மாதப் பெண்குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயி ரிழந்த சம்பவமொன்று நேற்று அதிகாலை நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுதாகரன் சுகப் பிரியா என்ற இரண்டு மாதப் பெண்குழந்தையே இவ்வாறு உயி ரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# தொண்டமான் நகருக்கு நாமல் ராஜபக்ஷ விஜயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி தொண்டமான் நகருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ரர்ஜபக்ஷ நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் விஜயம் செய்ததுடன் அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்தார்.

இதன்போது இக்கிராம மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளான மின்சாரம், வீட்டுத் திட்டம், வீதிப் புனரமைப்பு போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெற்றுத்தருமாறு எடுத்துக கூறினர்.

அதுமட்டுமல்லாது இக்கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று இல்லாமை பெரும் குறைபாடாகவுள்ளது எனவும் இக்கிராமத்திற்குப் பொதுநோக்கு மண்டபம் அவசியம் தேவையாகவுள்ளது எனவும் பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு இம்மக்களுக்கு குறைகள், பிரச்சினைகளைக் கேட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இக்கிராமத்திற்கு 10 இலட்சம் ரூபா செலவில் பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக அரச அதிபருடாக ஆராய்ந்து உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் என உறுதிமொழி வழங்கினார். இதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் ஏனைய பிரதேசங்களுக்கும் விஜயம் செய்ததுடன் அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார். (77)

## கேப்பாப்பிலவு பாடசாலைக்கு நிதியுதவி

கேப்பாப்பிலவு அரசினர் தமிழ கலவன் பாடசாலைக்குத் தென் மாகாணசபை நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. இப்பாடசாலையை அபிவிருத்தி செய்யும நோக்குடன் ஒரு கோடி ரூபாவை வழங்குவதற்கு தென்மாகாண சபை தீர்மானித்துள்ளது. (04)

## கொக்கிளாய் உப அலுவலகத்தை மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுரைப்பற்றுப் பிரதேச சபையின் கொக்கிளாய் உப அலுவலகம் மக்கள் மீள்குடியேறி 3 வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும் இதுவரை ஆரம்பிக்கப்படாமையால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் தாம் சேவைகளைப் பெறமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கொக்கிளாய் உப அலுவலகம் கடந்த யுத்த அனர்த்தத்திற்கு முன்னர் அதே இடத்தில் இயங்கி வந்த நிலையில் யுத்தத்திற்குப் பின்னர் இவ் உப அலுவலகம் செம்மலை உப அலுவலகத்துடன் இணைந்து செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில் செம்மலையில் இவ் அலுவலகம் இயங்குவதால் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருணாட்டுக்கேணி, பிரதேச மக்கள் சபையினூடாக பெறப்படும் சேவைகளைத் தாம் பெறுவதில் கஷ்டங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது சேவைகளைப் பெறுவதற்குச் செம்மலை உப அலுவலகத்திற்குப் பணத்தைச் செலவழித்துத் தாம் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கும் இம்மக்கள் இவ் அலுவலகத்தைச் சொந்த இடத்தில் மீள இயங்க ஆரம்பித்தால் தாம் கஷடங்களை அனுபவிக்க வேண்டியதில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே கொக்கிளாய் உப அலுவலகத்தை மீள அதே இடத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையினால் திருவாசக விழா அண்மையில் நடைபெற்றது. இதில் சமயகுரவர் நால்வரின் பட ஊர்வலத்தையும் திருவாசக பண்ணிசைக்கும் மாணவனோடு மடாதிபதி செ.மோகனதாஸ் சுவாமிகளையும் மற்றும் போட்டியில் பங்குபற்றிய மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் காணலாம். (116)

# கைத்தொலைபேசி பயன்பாடு கற்றல் நடவடிக்கை பாதிப்பு

## முல்லையில் அவலம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் கைத்தொலைபேசி பாவிப்பதால் மாணவர்களுடைய கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக மாணவர்களின் பெற்றோர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இம் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்கள் பாடசாலைகளிலும் கைத்தொலைபேசியை பயன்படுத்துவதாகவும் குறிப்பாக 45 நிமிடம் ஒரு பாடவேளை நடைபெறும் நிலையில் 10 நிமிடம் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவதால் மாணவர்களுக்கான நேரம் வீண் விரயமாவதாகவும் இதனால் கல்வி பாதிககப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை யாழ். மாவட்டத்திலோ வவுனியா மாவட்டத்திலோ ஆசிரியர்கள் கைத்தொலைபேசி பாவிக்கப்படுவது தடைசெய்யப்பட்டதுடன் அவசர தேவையாயின் அதிபர் அலுவலகத்தில் உள்ள தொலைபேசியைப் பயன்படுத்த முடியும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இம்மாவட்டத்திலும் ஆசிரியர்கள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துவதுடன் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிலும் அக்கறை செலுத்த வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

## எரிகாயங்களுடன் அனுமதி

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று எரிகாயங்களுக்கு இலக்காகிய கணவன் மனைவி ஆகிய இருவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இரவு இவர்களது வீட்டில் எரிந்துகொண்டிருந்த குப்பிவிளக்கு தட்டுப்பட்டதனால் இவர்கள் இருவரும் தீக்காயங்களுக்கு இலக்காகியதாகத் தெரியவருகின்றது. இவர்கள் தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள் எனவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

## விளையாட்டுக் கழகங்களுக்கான விசேட கூட்டம் இன்று

வேலணைப் பிரதேசத்தில் உள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விசேட கூட்டம் இன்று காலை 10.00 மணிக்குப் வேலணைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வருடாந்த விளையாட்டு விழாவுக்கான நிகழ்ச்சிநிரல் தயாரிக்கவும் ஏனைய முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவும் வசதியாகவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே கழகங்களின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளும்படி வேலணைப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் கேட்டுக்கொண்டுள்ளார். (93)

## கருவாடு உற்பத்தி யாழில் அதிகரிப்பு

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடத்தில் 17,830 கிலோ கருவாடுகள் பதப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவிததார். பருத்தித்துறை கிழக்கில் 2,500 கிலோ கருவாடும் பருத்தித்துறை மேற்கில் 4,000 கிலோ கருவாடும் காங்கேசன்துறையில் 2,000 கிலோ கருவாடும் காங்கேசன்துறை மேற்கில் 1,330 கிலோ கருவாடும் நெடுந்தீவில் 8,000 கிலோ கருவாடும் பதப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பதப்படுத்தப்பட்டுள்ள கருவாடுகள் உள்ளூர்ச் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.(25)

SAHANA
Security & Investigation (Pvt) Limited
பாதுகாப்புச் சேவை வெற்றிடம்
வடமாகாணம்
மேற்படி சேவைக்கான ஆளணி வெற்றிடம்

மேற்படி சேவையில் இணைந்துகொள்ள விரும்புவோர் தகைமைகள் :

01. உடற்தகுதி :-
சுகதேகியாகவும் மார்பளவு (34")
உயரம் : 5 அடி 8 அங்குலம்
வயது எல்லை : 21 - 27

02. கல்வி :
க.பொ.த. சா/த குறைந்தது 5 பாடம் சித்தி

03. நற்சான்றிதழ் :
கிராம சேவையாளர் / சமாதான நீதவான்

04. ஏனைய சான்றிதழ்கள் :
அடையாள அட்டை நிழற்பிரதி
கல்விச் சான்றிதழ்கள்
விளையாட்டுச் சான்றிதழ்கள்
ஏனையவை

05. நிரந்தர முகவரி

06. அரசாங்க சேவையாற்றும் இரு அதிகாரிகளின் நற்சான்றிதழ்

07. 22 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரியில் கிடைக்கக் கூடியவாறு தங்கள் சுயவிபரக் கோவை விண்ணப்பங்கள், சான்றிதழ்கள், நிழற்பட பிரதியுடன் (கடவுச் சீட்டு அளவு) நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

விளம்பர இலக்கம் - 01
பாதுகாப்புச் சேவை விண்ணப்பம்
தினமுரசு நாளிதழ் காரியாலயம்,
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(R/092)

# பொதுமக்களின் ஒத்துழைப்பின் மூலமே குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும்

## சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

(சண்டிலிப்பாய்)

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தவும் அவற்றினை இல்லாது ஒழிப்பதற்கும் பொதுமக்களின் ஒத்துழைப்பு பொலிசாருக்கு அவசியமாகும் என்று சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொ.ப.கங்கநாத் தெரிவித்தார்.

பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கும் பொலிஸாருக்குமிடையே சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில இடம்பொற்ற கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் பொலிஸாருக்கு உடனுக்குடன் தகவல்களை தந்தமையினால் குற்றசெயல்கள் இடம்பெறாமல் இயனறவரை தடுத்து நிறுத்தினோம்.

மேலும் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு சந்தேக நபர்களாக இருந்து நீதிமன்ற [illegible]டிக்கைகளுக்கு சமுகமளிக்[illegible]மல் தலைமறைவாக இருந்த பிடியானை பிறப்பிக்கப்பட்ட167 பேரையும் பகிரங்க பிடியானை, பிறப்பிக்கப்பட்ட 15 பேரையுமாக சேர்த்து மொத்தம் 182பேரை கைது செய்து நீதிமன்றங்களில் ஆஜர்ப்படுத்தினோம்.

அத்தோடு எமது பிரதேசத்தில் வீதி விபத்துக்களை தடுக்க பொலிஸாரை பிரதான மற்றும் முககிய வீதிகளில் கடமையில் ஈடுபடுத்தியுள்ளதோடு கடந்த வருடம் போக்குவரத்து விதிகளை மீறியதாக 4312 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துளளதோடு, பாடசாலை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் போக்குவரத்து சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகினறோம்.

மேலும் டெங்குநோயைத் தடுக்கவும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள, கிராமசேவையாளர்கள் மற்றும் பொதுமக்களின் ஒதுழைப்போடு விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை மேற்கொள்வதோடு கடந்த வருடம் டெங்குநோய் பரவக்கூடிய வகையில செயற்பட்டதாக 116 பேருககு எதிராகவும் குப்பைகூளங்களை பாதுகாப்பற்ற முறையில் போடடு இடையூறு ஏற்படுத்தியதாக 79 பேருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகங்களை தடுத்து நிறுத்த சிறுவர், பெண்கள் பிரிவை ஆரமபித்து பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சிறுவர் பெண்கள் துஷ்பிரயோகங்களை தடுப்பது சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்திவருகின்றோம்.

பொலிஸ் நிலையத்தில் முறைபாடு பதிவு செய்யப்பட்டால் அதனை 48 மணிநேரத்தில் விசாரனை செய்து அதற்குரிய தீர்வினை காணவேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் N.K.இளங்கக்கோனின் ஆலோசனையின் பிரகாரம் வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா, யாழ் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எரிக் பெரோரா, யாழ்ப்பாண பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெப்ரி ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் மக்களுக்கான சேவைகளை ஆற்றி வருவதாக பொலிஸ் நிலைய பொறுப பதிகாரி தெரிவித்தார். (54)



திருநெல்வேலி கிழக்கு பிள்ளையார் வீதியில் வசிக்கும் 20 குடும்பங்களுக்கு மின்னிணைப்பு வழங்கும் வகையில் மின்கம்பம் நட்டு மின்னிணைப்பு வழங்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையை குளப்பிட்டி - கொக்குவில் இலங்கை மின்சாரசபை அதிகாரி குமாரலிங்கம், மற்றும் ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைபபாளரும் நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவருமான அம்பலம் இரவீந்திரதாசன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைப்பதைக்காணலாம்.

# காணிக்கச்சேரி சேவையை நடைமுறைப்படுத்தக் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிக்கச்சேரி சேவைகள் இதுவரை இடம்பெறாமையால் யுத்தத்தின் போது காணி உறுதி தொடர்பான ஆவணங்களை இழந்த மக்கள் அவற்றை பெற முடியாது சிரமங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு போன்ற 4 பிரதேச செயலகங்கள் உள்ள நிலையில் இவற்றினூடாக காணிக்கச்சேரி முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் காணிக்கச்சேரி இடம்பெற்று மக்கள் இதனூடாக சேவைகளைப் பெற்றுள்ளனர்.

ஆனால் இம்மாவட்டத்தில் காணிக்கச்சேரி நடைபெறாமையால் தாம் காணி உறுதிகளை பெறமுடியாது வீட்டுத்திட்டங்களை இழப்பதாக தெரிவிக்கும் இம்மக்கள் இவ்வருடமாவது காணிக்கச் சேரியை நடைமுறைப்படுத்து மாறும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(04)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் விசேட நுளம்பு ஒழிப்பு வாரம் [illegible]வகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் பெய்த கனமழையினால் இப்பிரதேசத்தில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் இவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் இது தொடர்பாக கலந்துரையாடியதை அடுதது டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நோயினால் ஒக்ரோபர் மாதம் 21 பேரும், நவம்பர் மாதம் 37 பேரும், டிசம்பர் மாதம் 40பேரும் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் டெங்கு ஒழிப்பை கட்டுப்படுத்தும் வகையில் இப்பிரதேசத்திலுள்ள பொது நிறுவனங்கள், பாடசாலைகள், திணைக்களங்கள் என்பன சுற்றுச்சூழலை துப்புரவாக வைத்திருப்பதுடன் டெங்கு நோய் பரவுவதைத்தடுக்க ஒத்துழைக்குமாறு அறிவிக்கப்பட்டது.

மேலும் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவினரால் பல்வேறு தொண்டுநிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அனைத்து இடங்களிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

# ஆன்மீக சொற்பொழிவு

(மல்லாவி)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தேவி பாகவதம் என்னும் விடயம் பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# மல்லாவி வணிக மன்றத்தால் விளம்பர சேவை நிலையம் திறப்பு

(மல்லாவி)

மல்லாவி வணிக மன்றத்தின் வர்த்தக விளம்பர சேவை நிலையம் கடந்த சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் திறந்த வைக்கப்பட்டுள்ளது.

வணிக மன்றத்தலைவர் ச.காந்தரூபன் தலைமையில் மல்லாவி பிரதான வீதியில் அமைந்துள்ள வணிக மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் பிரதேச செயலக பிரதித்திட்டப் பணிப்பாளர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, மல்லாவி பொலிஸ் அதிகாரி ஜெகத் விஜயசிங்க, மல்லாவி நகர் இராணுவ அதிகாரி லெப்டினன் புஸ்பகுமார, மல்லாவி சிவன் ஆலய குருக்கள் பி.ஞானப்பிரகாசம், மல்லாவி செபஸ்தியார் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை தயாபரன், துணுக்காய் பிரதேச சபை தவிசாளர் இ.இராசரட்ணம் முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை முகாமையாளர் இ.சோதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் துணுக்காய் பிரதேச சபை செயலாளர் மு.கிருஸ்ண நவரட்ணராஜா நிலையத்தை நாடாவெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மல்லாவி தெரு வீதிகளுக்கு மின் விளக்குகளை பொருத்தவதற்கு ஏதுவாக மின் விளக்குகளை பெற்றுத்தருவதாக உறுதியளிக்கப்பட்டது.(140)



நெல்லியடி லயன்ஸ் கழகம் குடத்தனையில் நடத்திய இலவச மருத்துவ முகாம் அண்மையில் நடைபெற்றபோது பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி செ.செந்தூரன் உரையாற்றுவதையும், லயன்ஸ் கழக வலய தலைவர் எஸ்.பிரதீபன் முதியவர் ஒருவருக்கு கண்ணாடி வழங்குவதையும், வைத்தியர்களால் மருத்துவ பரிசோதனை இடம்பெறுவதையும் காணலாம். (01)

பயத்தை உன்னிடமே வைத்துக்கொள், உன் துணிவை மட்டும் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வெறுப்பில் தடுமாறும் ஊடகங்கள்!

ஊழல் என்பது பணமோசடி மட்டுமல்ல கருத்து ரீதியான மோசடி, மக்களை ஏமாற்றுதல், பிழையான வழிகாட்டுதலைச் செய்தல், அரசியல் ரீதியான குற்றம் போன்றவையும் ஊழல் தான் என்பது நமது இன்றைய புரிதல்.

நம் தமிழ் ஊடகங்கள் இன்னமும் தங்கள் எளிமையான சூத்திரங்களை விட்டு வெளியே வருவதாக இல்லை. அரசையும் அரச இராணுவத்தையும் திட்டிக்கொண்டிருப்பதன் மூலம் கிடைக்கும் "கெத்"தே நமது மக்களுக்குப் போதும் என்று கருதுகிறார்கள். அவர்கள் வாழ்வுக்கு என்ன வழி என்றோ இன்றைய நிலையிலிருந்து மக்கள் தம்மை உயர்த்திக் கொள்வது எப்படி என்றோ எதுவும் சிந்திக்கத் தேவையில்லை; யாரையாவது பழிசொல்லித் திட்டிக்கொண்டிருக்கும் கிறுகிறுப்பே போதும் என எல்லோரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆவேசங்களையும், பகைவெறுப்பையும் வைத்துக்கொண்டு, உண்மைகளை மக்களிடம் மறைத்து வருகின்றனர். உண்மைகளைச் சொல்லிவிட்டால் மக்களிடம் ஏற்றிவைத்திருக்கும் உணர்ச்சிகர ஆவேசங்களும் அரசுக்கெதிரான – மாற்று இனத்தவர்க்கெதிரான வன்மங்களும் தணிந்துவிடுமோ என்று பொய்யர்களையும் பித்தலாட்டக்காரர்களையும் மக்கள் மத்தியில் தலைவர்களாக உயர்த்தி வருகின்றன இந்த ஊடகங்கள். அவர்கள் அரசை எதிர்த்து நாலு வீரவசனங்களைச் சொல்வதே போதும் இவர்களுக்கு. அவர்கள் எத்தகைய கேடு கெட்டவர்களாக இருந்தாலும் அவர்களை வீர நாயகர்களாக்குகின்றன இந்த ஊடகங்கள்.

அதனால்தான் நிதிநிறுவன மோசடி மூலம் மக்களை நடுத்தெருவில் விட்டுவிட்டு ஓடிப்போனவர்களெல்லாம் திரும்பவந்து தலைவர்களாவதற்கும் இந்த ஊடகங்கள் உதவுகின்றன. அவர் அரசை எதிர்த்து நாடாளுமன்றத்திலும் யாழ்ப்பாணம் பஸ்ஸ்ராண்டிலும் முடிந்தால் பிபிசி பேட்டியிலும் நாலு வீரவசனங்களை முழங்குவாராக இருந்தால் சரி. அதன்பிறகு அவர்கள் பஜிரோவில் ஏறிப் போய்விடலாம்; டிப்ளோமற் வீசாவில் வெளிநாடுகளில் உள்ள குடும்பத்தினரிடமும் போய்விடலாம். தமிழ் மக்களுக்கான தீர்வை அரசாங்கம்தான் வைக்கவேண்டும், அல்லது அதை சர்வதேசம் பார்த்துக்கொள்ள வேண்டும். அது குறித்து எந்தத் திட்டத்தையும் இவர்கள் தமிழ்மக்களிடம் சொல்ல வேண்டியதில்லை.

அதுபோல், இந்த ஊடகங்கள் உருவாக்கி வைத்திருக்கும் தலைவரின் அலுவலகத்திலிருந்து வெடிபொருட்கள், ஆபாச சிடிக்களை எல்லாம் பொலிசார் சென்று கைப்பற்றலாம்; அவரது உதவியாளரை ஆதாரங்களுடன் கைது செய்துகொண்டும் போகலாம். அவர் அரசை எதிர்த்து வீரவசனங்கள் பேசுபவராக இருந்தால், பொலிசார்தான் எல்லாவற்றையும் கொண்டுபோய் வைத்துவிட்டு எடுத்துச் செல்கிறார்கள் என்று எந்த ஆதாரங்களுமில்லாமல் விழுந்தடித்து எழுதி, மக்களுக்கு அந்தக் குற்றவாளிகளே நாயகர்கள் என்று ஆக்கும் இந்த ஊடகங்கள்.

ரஷ்யாவிடமுள்ள கோபத்தால் அமெரிக்கா பின்லேடனை வளர்த்துவிட்டது போல அல்லது இலங்கை அரசிடமுள்ள கோபத்தால் சிறுநாடுகளை முழுங்கும் வெளிநாடுகளிடம் போய் தமிழ்த் தலைவர்கள் என்போர் மண்டியிட்டுக் காத்திருத்தல் போலத்தான் இதுவும். ஊடகங்களைச் சார்ந்தவர்களும் தங்களிடமுள்ள கண்மண்தெரியாத அரசவெறுப்பால் மக்களை ஏய்த்து அரசியல் செய்துகொண்டிருப்போரை எல்லாம் தலைவர்களாகக் காபந்து பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

இதன்மூலம் மக்களை ஏய்க்கும் ஊழல் அரசியலையே உருவாக்கி வளர்க்கின்றனர். மக்களது வெறுப்பை விரக்தியை வடியவிடாமலும் அதேசமயம் வாழ்நிலையை உயரவிடாமல் வைத்திருப்பதன் மூலம் தங்கள் அரசியல் இருப்பை நிலைப்படுத்திக் கொள்கிறார்கள் இந்தத் தலைவர்கள்; அவர்களைக் காப்பாற்றியபடி, தமிழ் மக்களை இருளிலேயே வைத்திருக்கின்றன இந்த ஊடகங்கள்.

மக்கள் உணர்ச்சிகளைத் திருடி அவர்களது வாழ்வைக் கொள்ளையடிக்கும் அரசியலிலிருந்து, அவர்களை வாழ வைக்கும் நடைமுறைச் சாத்திய அரசியலுக்கு மாறவேண்டும்.

- ஆசிரியர்

# ஷிராணியின் பதவி நீக்க அறிவித்தல்

# மீளப்பெறுமாறு சட்டத்தரணிகள் கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவிநீக்குவதற்கான அறிவித்தலை மீளப்பெறுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டுள்ள சட்டத்தரணிகளின் கூட்டிணைப்பு, அரசியலமைப்பிற்கு முரணாக சட்டவிரோதமாக நியமிக்கப்படும் புதிய பிரதம நீதியரசருக்கு எதிராக ரீட் ஆணை பெற்றுக்கொள்ளப்படும். என்றும் அறிவித்துள்ளது.

நிப்போன் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட சட்டத்தரணிகளின் கூட்டிணைப்பைச் சேர்ந்த சட்டத்தரணிகளே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

குற்றப்பிரேரணை மற்றும் அதன் செயன்முறை தொடர்பில் உயர்நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் அறிவிப்புகள் மற்றும் தீர்ப்புக்களை வழங்கியிருந்தது. எனினும் குற்றப்பிரேரணை நடவடிக்கை அரசியலமைப்பிற்கு முரணாகவே முன்னெடுக்கப்பட்டது.

சட்டவிரோதமாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் கீழ் பிரதம நீதியரசரை சட்டவிரோதமாக நீக்கிவிட்டு புதிய நீதியரசரை நியமிப்பது சட்டவிரோதமானதாகும்.

அந்த சட்டவிரோதமான நியமனத்தை வழங்கும் நடவடிக்கையானது சட்டவிரோதமானதாகும். நிறைவேற்று அதிகாரம் கொண்டவரே இவ்வாறான சட்டவிரோத நியமனத்தை வழங்கி வைக்கின்றார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்திற்கு செல்லமுடியாது. எனினும் அவரினால் நியமிக்கப்பட்ட சட்டவிரோத அல்லது தகுதியில்லாத நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி அதற்கு எதிராக நீதிமன்றத்திற்குச் செல்லமுடியும்.

சட்டவிரோத நியமனத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்யமுடியும். இன்றேல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரீட் ஆணையை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவித்தனர்.

# மண்டைதீவு நீர்நிலைகளில் வெளிநாட்டுப் பறவைகள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் உள்ள நன்னீர் நிலைகளில் தங்கியுள்ள வெளிநாட்டுப் பறவையினங்களை பல்வேறு தரப்பினரும் வந்து பார்வையிட்டும் புகைப்படமெடுத்தும் வருகின்றனர்.

மண்டைதீவுப் பகுதியினைச் சூழவுள்ள உவர் நீர்த்தடுப்பணை புனரமைக்கப்பட்டதனை அடுத்து அந்தப்பகுதியில் சமீபத்தில் பெய்த மழைநீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வெளிநாடுகளில் இருந்து பருவகாலத்திற்கு வரும் வெளிநாட்டுப்பறவையினங்கள் இந்த நீர்நிலைகளில் தங்கியுள்ளன. பெரிய இனக் கொக்குகள் நாரைகள், தாராக்கள், மற்றும் இதர இனப் பறவைகள் இவற்றில் அடங்கியுள்ளன. இவை நீர் நிலைகளில் தங்கியிருக்கும் போது பார்ப்பதற்கு மிகவும் அழகாகக் காட்சி தருகின்றன.

இவற்றைப்பார்ப்பதற்கு பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள், மற்றும் பறவை ஆராட்சியாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் இந்தப்பகுதிக்கு வந்து பறவை இனங்களைப் பார்வையிட்டும் புகைப்படமெடுத்தும் வருகின்றனர். அத்துடன் இத்தப்பகுதி பறவைகள் இனப்பெருக்க காலத்தில் தங்கியிருந்து [illegible] லக்கூடியவாறு கண்டல் கா[illegible] களையும் கொண்டிருக்கின் றது. என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் தைபோயிற் காய்ச்சலிற்கு (நெருப்புக்காய்ச்சல்) இலக்காகிய மூவர் நேற்று சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலையின் தொற்றுநோய்த் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கோண்டாவில் கிழக்கில் இருந்து ஒருவரும் உடுப்பிட்டியில் இருந்து ஒருவரும் மற்றும் கிளிநொச்சி வேரவில் பகுதியில் இருந்து ஒருவருமாக மூவர் தைபோயிற் காய்ச்சலிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றைய தினம் வைத்தியசாலையில் டெங்கு நோய்த்தாக்கத்திற்கு இலக்காகிய இருவர் சிகிச்சைக்கு அனும[illegible] கப்பட்டிருப்பதாகவும் தொற்று நோய்த்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அரியாலைப் பகுதியில் இருந்து ஒருவரும் திருநெல்வேலிப் பகுதியில் இருந்து ஒருவருமாக இருவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது. (பா)

# இலங்கையின் ஜனாதிபதி சட்ட ஆணைக்கு அப்பாற்பட்டவர்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்க பொதுச்செயலர் தெரிவிப்பு

பதினெட்டாவது திருத்தத்தால் பிரதம நீதியரசரை அப்பதவியிலிருந்து ஜனாதிபதியால் வெளியேற்ற முடியும். அதனை சட்டம் தடுக்க முடியாது. சட்டத்தின் ஆணைக்கு அப்பாற்பட்டவர் ஜனாதிபதி என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசாங்கம் குற்றவியல் பிரேரணையை கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றியுள்ளது.

இந்தத் தீர்மானம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு பிரதம நீதியரசரை வெளியேற்றும் கடிதத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ளார்.

ஆனால், பிரதம நீதியரசர் நீதிமன்றம் தனக்கு சார்பாக வழங்கிய தீர்ப்பை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஜனாதிபதியின் கடிதத்தையும் ஏற்காது பலாத்காரமாக பதவியை பிடித்துக் கொண்டுள்ளார். இது சட்டவிரோதமாகும். பிரதம நீதியரசர் இவ்வாறு அடம் பிடித்தால் 18 ஆவது திருத்தத்தால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி பிரதம நீதியரசரை வெளியேற்ற முடியும் என்றார்.

# கியூபாவிற்கான தூதுவராக சரத் திஸநாயக்க நியமனம்

கியூபாவிற்கான இலங்கையின் புதிய தூதுவராக சரத் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானியா, ஜப்பான், சீனா, குவைத் போன்ற நாடுகளில் சிரேஷ்ட இராஜதந்திர அதிகாரியாகவும் சரத் திஸாநாயக்க ஏற்கனவே கடமையாற்றியிருந்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது வெளிவிவகார அமைச்சின் பொதுத் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகிக்கும் அவர் அடுத்த மாதம் முதலாம் திகதி கியூபாவிற்கான இலங்கையின் புதிய தூதுவராக பதவியேற்கவுள்ளார். வெளிவிவ்கார அமைச்சில் இணைவதற்கு முன்னதாக சரத் திஸாநாயக்க உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டில்லி பெண்ணின் உயிர் பிரிந்த நாள் டிசம்பர் 29 பாலியல் வன்கொடுமைக்கெதிரான உலக தினமாகட்டும்!

**இனப்பிரச்சினையில் உள்ள அக்கறை போல் பெண் ஒடுக்கு முறை, சாதி ஏனைய சமூகப்பிரச்சினைகள் முதன் மைப்படுத்தப்படுவதில்லை. அவையவை, பாதிக்கப்படும் சமூகப் பிரிவினர் சார்ந்து முக்கியமானவை. எனவே சமூக இயக்கங்களில் பன்முகத்தன்மை அவசியப்படுகிறது.**




ஞானசத்தி-ராஜி




டில்லியில் ஓடும் பேருந்தில் மருத்துவக்கல்லூரி மாணவி மனித உருவிலான வெறிகொண்ட மிருகங்களால் மிக கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு (டிசம்பர்16) உயிருடன் போராடி மடிந்ததும் (டிசம்பர் 29), இந்தக் கொடுமைக்கு எதிராகஇந்தியாவை உலுக்கிய பல எழுச்சிப் போராட்டங்களும் உலகமே திரும்பிப் பார்க்க வைத்த நிகழ்வுகளாகவும் அமைந்தன.

இத்தகைய அவலங்கள் காலம் காலமாக நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

ஆனால் இந்த சம்பவம் டில்லி மாநகரில் நடந்ததும் ஊடகங்களில் பெரும் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியதும் பெண்கள் - வெகுஜனங்கள் மத்தியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது.

அந்தப் பெண்ணின் அவலமும் மரணமும் பெண்ணுரிமை தொடர்பாக உலகளாவிய தார்மீகக் கேள்வியை எழுப்பியுள்ளது. பெண்களின் பாதுகாப்பு உரிமைகள் தொடர்பாக மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் நிகழ்வதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதைக் கண்டறிவதோடு எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நிகழாதிருப்பதற்கு எத்தகைய முன்னெடுப்புக்களை மேற்கொள்ளப் போகிறோம் என்பதும் சமூகத்தின் முன்னுள்ள சவால்களாகும்.

பெண்ணானவள் ஒரு பொருள் அல்ல, அவளும் சமூகத்தில் ஆணுக்கு நிகரான மனுசி என்பதை முதலில் இந்த சமூகத்தின் மனிதர்களால் உணரப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதற்கான கல்வி முறை, கலாசாரம், பாரம்பரியம் குடும்ப அமைப்பு இவை அனைத்திலும் மாற்றங்கள் நிகழ வேண்டும்.

ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து சமத்துவம், நாகரிகம், மனிதாபிமானம் கற்றுத்தரப்பட வேண்டும். கல்விமுறை ஆரம்ப நிலையிலிருந்தே ஆண் பெண் சமத்துவத்தை வலியுறுத்துவதாக அமைய வேண்டும்.

வெளியில் தொழில் பார்க்கும் இடங்களில் இருந்து சமையலறை வரை நடைமுறைகள் கண்ணோட்டங்கள் மாற வேண்டியிருக்கிறது.

சட்டம் ஒழுங்கு பொலிஸ் எந்த லட்சணத்தில் இருக்கிறது? முக்கியமாக இவர்களுக்கு சமூகம் சார்ந்த பெண்கள் சார்ந்த நவீன கல்வி, போதனை அவசியம். சமூகம் பற்றிய சரியான மதிப்பீடுகள் புரிதல்கள் இருக்க வேண்டும். இது எந்தளவு தூரம் அதிகார மட்டதில் உணரப்பட்டிருக்கிறது.

இன்று இந்த சமூக அவலத்தில் ஊடகங்களுக்கு முக்கிய பாத்திரம் உண்டு.

சினிமாக்களில் பெரும்பாலானவை பரவலாக ஆணாதிக்கத்தை நியாயப் படுத்துபவையாகவும் பாலியல் வன்முறை மூலம் பெண்ணை அடைவதை காதல் என அர்த்தப்படுத்துகிறார்கள்.

பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பெண்ணை கட்டப்பஞ்சாயத்து தீாப்புகள் மூலம் அந்த கொடுமையை இழைத்த ஆணைத் திருமணம் செய்வதே சரியானது என்பது போல நியாயம் சொல்லப்படும்.

எங்கும்எதிலும் பெண்களின் வாழ்க்கையின் அனைத்து நிகழ்வுகளிலும், சம்பவங்களிலும் தீர்மானம் மேற்கொள்வது ஆணாகவே சித்தரிக்கிறார்கள். அது தான் நியாயம் என்ற மாய விம்பத்தையும் இந்த சமூகத்திற்கு வழங்குகிறார்கள்.

சினிமாக்களில் ஊடகங்களில் விளம்பரங்களில் கவர்ச்சிப் பொருளாக, ஆண்களின் வக்கிரமான விருப்பத்திற்கும் ஆசைகளுக்கும் தீனி போடுவது போலவும் பெண் உடலை காண்பிக்கிறார்கள். சிறுவர்களில் இருந்து வயோதிபர்கள் வரை பெண்ணுடலை வக்கிரமாக ரசிப்பதை நகைச்சுவை நிகழ்வாக இயல்பானதாக காண்பிப்பார்கள். இரட்டை அர்த்த வசனங்களும் பாடல்களும் குப்பையாக தமிழில் விரவிக் கிடக்கின்றன. பல சினிமாத்துறை சார்ந்த கதை, பாடலாசிரியர்களின் மனோபாவமும் அவ்வாறு தான். இது கொடுமையும் அயோக்கியத்தனமுமாகும்.

கலாசாரம் பண்பாடு என்று பேசப்படும் எமது பெருவாரியான இலக்கியங்களிலும் வன்முறைகள் பெண்ணடிமைத்தனம் நியாயப்படுத்தப்படுகிறது.

கற்பு என்ற சொல் பயன்படுத்துவதே தவறானது. கற்பு, விபச்சாரி, விதவை இந்த சொற்கள் பெண்களுக்கு மட்டும் உரித்தானதாக சமூக வழக்கில் சர்வசாதாரணமாக உபயோகிக்கப்படுகின்றன. இந்த ஆணாதிக்க தமிழ் சீர்திருத்தப்பட வேண்டும்.

மனித வாழ்க்கைக்கு பொதுவான கட்டுப்பாடுகள், ஒழுங்கு முறைகளும் அவசியம் ஆனால் பெண்ணை அடிமை கொள்வதாக இருக்க முடியாது.

சில ஊடகங்கள் பெண்கள் இரவில் திரிவது, ஒழுங்கீனமான ஆடை அணிவதால், ஆண்கள் தவறுசெய்வதற்கு தூண்டப்படுவதற்கு வாய்ப்பாக இருப்பதாகவும் தொடர்ந்து பாலியல் வன்கொடுமைகள் நடப்பதற்கு பெண்களே பொறுப்பு என்று குற்றம் சாட்டுகின்றன. பழங்குடி மக்கள் அவர்கள் சாதாரணமாகவே வாழ்கிறார்கள். அவர்களிடம் உடை பற்றிய பிரக்ஞைகள் வக்கிர உணர்வுகள் இருப்பதில்லை. ஆனால் நவ நாகரிகமாக தங்களைக் காட்டிக் கொள்ளும் மக்கள் மத்தியில் மிருக உணர்ச்சி கொண்டவர்கள் அதிகமாகவே காணப்படுகிறார்கள்.

இன்று சமூகம் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக நம்மில் பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் கல்வியில் தொழிலில் பொருளாதாரத்தில் அறிவியலில் வானியல் மருத்துவம் உட்பட பல தரப்பட்ட துறைகளில் முன்னேற்றத்தை அவதானிக்க முடிகிறது.

நாட்டின் பிரதமராகவும் அமைச்சர்களாகவும், நீதிபதிகள், வக்கீல்களாகவும், பொது நிர்வாக பொலிஸ் அதிகாரிகளாகவும், வான்வெளி வீரர்களாகவும் விஞ்ஞானிகளாகவும் பல்வேறு துறைகளிலும் பெண்கள் இரவுபகல் என்றில்லாமல் பணியாற்றும் காலத்தில் பெண்கள் இரவில் திரிவதை தவிர்க்க வேண்டும் என்று அரசியல் வாதிகள், அமைச்சர்கள், மதத் தலைவர்கள் போதனை செய்கிறார்கள். இதுவும் ஆணாதிக்க சமூக வெளிப்பாடே. இது வெட்கக் கேடு.

எமது சமூகம் பெண்ணை வலிமை குறைந்தவளாகவே என்றும் சித்தரித்து வருகிறது. பெண்ணானவள் சமூகத்தில் அன்பு, சாந்தம், பொறுமை, தியாகம், பேணுதல் போன்ற குணமுடையவளாக போற்றப் படுபவளாக எதற்கும் இசைவானவளாக சூழலுக்கு ஆடவனுக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என்று போதிக்கப்படுகிறது.

ஆண் வீரம், கோபம், ஆளும் திறன், பாதுகாவலன் ஆக சமூகம் ஊட்டி வளர்க்கிறது. இந்த ஆணாதிக்க சமூக அமைப்பு இருக்கும் வரை எந்த முன்னேற்றமும், வளர்ச்சியும் சாத்தியமில்லை!

எனவே ஆண்-பெண் சமத்துவத்தின் அவசியத்தை அதன் உண்மையான வெளிப்பாட்டை சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் உணர்ந்து புரிந்து செயற்பட முன்வரவேண்டும்.

ஒரு பெண்ணை அவளுடைய விருப்பத்திற்கு மாறாக கணவனோ அவளுடைய வாழ்க்கைத் துணையோ எவராயினும் அவளின் அனுமதியின்றி அவளுடலைத் தீண்டுவது அனுமதிக்க முடியாததும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததுமாகும். ஆனால் இன்று சராசரி குடும்பங்களில் ஆணின் விருப்பங்கள் தேவைகளுக்கேற்ப பெண்களை தமது அடிமைகளாக நடந்து கொள்ள நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள்.

இரத்த உறவு முறைகளுக்குள்ளும் தகப்பன் பேரன் மாமன் மைத்துனன் இப்படிப் பலவிதமான உறவுகளில் உள்ளவர்கள் தமது பாலியல் இச்சைகளுக்கு பலவந்தப் படுத்துவதும் உடல் ரீதியாக மன ரீதியாக துன்புறுத்துவதும், இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு குடும்பத்தில் பெரியவர்கள் என்று கருதப்படுபவர்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் துணை போகிறார்கள். இதை சர்வ சாதாரணமான நிகழ்வாக கருதுகிறார்கள்.

காலாதிகாலமாக நின்று நிலையாகிவிட்ட இந்த அடிமை நிலையிலிருந்து விடுதலைபெற சமூகத்தில் மாற்றம் நிகழ தொடர்ச்சியான இயக்கம் தேவை.

இதுபோன்ற வன்கொடுமைகள் இலங்கையிலும் தொடர்கின்றன.

(17ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானமும் ஐக்கியமும் இலங்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் சமாதானம், ஐக்கியம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கும், உலகில் வாழும் சகல மக்களுக்கும் சௌபாக்கியம் நிறைந்த தைப் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதாகப் பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

தைத்திருநாளை முன்னிட்டு அவர் விடுத்திருக்கும் வாழ்த்துச் செய்தியில்: இந்து மக்களுக்குப் புதிய வாழ்வை உருவாக்கும் தைப்பொங்கல் பண்டிகை சிறப்புமிகு கொண்டாட்டமாகும். சகலருக்கும் நன்மைகளைத் தெரிவித்து சமாதானம், ஐக்கியம் ஆகியவற்றை எதிர்பார்க்கும் தைப் பொங்கல் பண்டிகை முக்கிய பண்டிகையாகும்.

இலங்கையில் நிலவும் சமாதானமும், ஐக்கியமும் உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதால் இது முக்கியம் பெறுகிறது. பல ஆண்டுகளாகத் தொடர்ந்த கொடிய யுத்தம் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

வட, கிழக்கு மக்கள் மட்டுமன்றி சகல சமூகங்களும் ஐக்கியமாக வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது. மக்கள் தலைவரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எமக்கு நிரந்தர சமாதானத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளை அபிவிருத்தி செய்ய அவர் நடவடிக்கை எடுத்ததால் அங்கு வாழும் தமிழ் மக்களின் வாழ்வு மேலும் வசதியாக உள்ளது.



வாழ்வின் சௌபாக்கியம் அவர்களின் வாழ்வை ஒளிமிக்கதாக மாற்றியுள்ளது. என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடல் இழுத்துச் சென்ற பிரிட்டன் பிரஜை மரணம்

பிரித்தானிய பிரஜையின் சடலம் தங்காலை, சீனிமோதர கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜோன் ரொபர்ட் சிமித் (வயது 60) எனும் பிரித்தானிய பிரஜையின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இவர் தங்காலை, சீனிமோதர கடலில் குளித்துக்கொண்டிருந்த நிலையில் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இரவு நேரத்தில் குளிக்கும் வழமையை கொண்ட இவர் கடந்த சனிக்கிழமை இரவு 9 மணியளவில் ஹோட்டலிலிருந்து வெளியேறி கடலில் குளித்துக்கொண்டிருந்தபோது இரவு 9.40 மணியளவில் கடலில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதனை அவதானித்த பொதுமக்கள் இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இவரின் சடலத்தை கடற்படையினர் மாவேல பகுதியிலிருந்து மீட்டு தங்காலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டக்கல்லூரி நுழைவுப்பரீட்சை; நிறுத்தப்பட்டது மீளாய்வு


(கொழும்பு)

2013 ஆம் ஆண்டிற்கான சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சையின் பெறுபேறு மீளாய்வை நிறுத்துமாறு சட்டக் கல்லூரியின் அதிபர், எழுத்துமூலம் தமக்கு அறிவித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டப்ளியூ. எம். என். ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

சட்டக் கல்விச் சபையின் அனுமதியின்றி அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது என, சட்டக் கல்லூரியின் அதிபர் தனக்கு அறிவித்துள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். இதனால் இந்தப் பரீட்சையின் பெறுபேற்று மீளாய்வு மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுநலவாய நாடுகளின் கொள்கைகளை இலங்கை அமுல்படுத்தவேண்டும்

## கனடா வலியுறுத்து



பொதுநலவாய நாடுகளின் கொள்கைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென கனடா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக மனித உரிமை, சட்டம் ஒழுங்கு, ஜனநாயகம் உள்ளிட்ட விவகாரங்களில் இலங்கை பூரணமாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளை அமுல்படுத்த வேண்டுமென கனேடிய வெளிவிகார அமைச்சின் பேச்சாளா அமாண்டா ரெய்ட் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் பின்பற்றப்படாவிட்டால் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் கனடா பங்கேற்காது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், ஜனநாயக பெறுமதிகள், அரசியல் நல்லிணக்கம் போன்றன தொடர்பில் இலங்கை கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட யோசனைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென ரெய்ட் வலியுறுத்தியுள்ளார்.

# 74 எலும்புக்கூடுகள் மாத்தளையில் மீட்பு


(மாத்தளை)

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் இதுவரை 74 எலும்புக் கூடுகளும் 60 மண்டையோடுகளும் மீட்கப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வைத்தியசாலை வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டட நிர்மாணப் பணிகளின்போது மனித எலும்புக்கூடுகளும் மண்டையோடுகள் பலவும் அண்மைக்காலமாக மீட்கப்பட்டு வருகின்றன. இதனையடுத்து கடந்த மாதம் முதல் இவ் வைத்தியசாலை வளாகத்தில் எலும்புக்கூடுகளை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை வரை 74 மனித எலும்புக் கூடுகளும் 60 மண்டையோடுகளும் மீட்கப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

# கறவை மாடுகள் இறக்குமதியில் மோசடி இடம்பெற்றதாக குற்றச்சாட்டு



(கொழும்பு)

பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அவுஸ்ரேலியாவிலிருந்து 1500 கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அதில் 7500 இலட்சம் ரூபாய் ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளது. என்று தேசிய சங்க சபையின் நிதிச்செயலாளர் தின்னியாவல பாலித தேரர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் இறக்குமதி செய்யப்பட்ட கறவை மாடுகள் பால் கறக்காது. ஏனென்றால் அந்த மாடுகள் சினை மாடுகளாகவே நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அதிலும் பல மாடுகள் நோய்வாய்பட்டுள்ளன. நாட்டில் இருந்த மாடுகளை கொன்று குவித்துவிட்டு இறக்குமதி செய்வதில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை. 1500 கறவை மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது. எனினும் மாடுகளை இறக்குமதி செய்ததன் மூலமாக 7500 இலட்சம் ரூபா ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளது.

பொது கணக்குகள் பற்றிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் 259 நிறுவனங்களின் ஊழல் மோசடிகள் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன என்றார்.

# பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்புத்திட்டம் வெற்றி



(கொழும்பு)

கடந்த ஆண்டு நாடளாவிய ரீதியாக பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு திட்டங்கள் சிறந்த பலனை அளித்துள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு போராட்டங்கள் வெற்றியளித்துள்ளன. தெரிவித்துள்ளன அவர், அதேபோன்ற திட்டங்கள் இந்த வருடத்திலும் தொடரும்.

பாடசாலை மாணவர்கள் மேற்கொண்ட பணி பாராட்டுக்குரியது எதிர்காலத்தில், பாடசாலை படிப்பில் மட்டும் கவனம் செலுத்தாமல், நாட்டின் சுகாதாரத்தை பேணுவதற்கான நடவடிக்கைகளையும் பேண வேண்டும்.

நாடளாவிய ரீதியாக 42 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்களின் சுகாதார நடவடிக்கைகளுக்காக பெரும் தொகையான பணத்தை அரசாங்கம் செலவிடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடந்த ஆண்டில் மட்டும் 192 எயிட்ஸ் நோயாளர்கள்

(கொழும்பு)



இலங்கையில் 1987ஆம் ஆண்டின் பின்னர் கடந்த ஆண்டு அதி கூடிய எயிட்ஸ் நோயாளிகள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு 192 எயிட்ஸ் நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என சுகாதார அமைச்சின் பாலியல் நோய்ப் பிரிவுப் பொறுப்பாளர் டாக்டர் லிலானி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் பதிவான எயிட்ஸ் நோயாளிகளில் அதிகளவானவர்கள் ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 118 ஆண்களுக்கு எயிட்ஸ் நோய் தொற்று பரவியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எயிட்ஸ் நோய்த் தொற்று பரவும் வேகம் அதிகரித்துள்ளதாக டாக்டர் லிலானி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# சிரேஷ்ட நீதிபதியை நியமிப்பது உகந்தது

நடைமுறையில் உள்ள சம்பிரதாயங்களின் படி உயர்நீதிமன்ற சிரேஷ்ட நீதிபதி ஒருவர், பிரதம நீதியரசர் பதவிக்கு நியமிப்பது உகந்தது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் நந்த சில்வா தெரிவித்துள்ளார்.பிரதம நீதியரசர் நீக்கப்பட்டமை தொடர்பாக பிரச்சினை தொடர்ந்து செல்வதால், சிறந்த நடவடிக்கையாக, சம்பிரதாய பூர்வமாக பிரதம நீதியரசராக நியமிக்கப்படுவது சிறந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உயர்நீதிமன்ற நீதியரசர்களை தவிர வேறு ஒருவரை புதிய பிரதம நீதியரசராக நியமித்தால் அது பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.அவ்வாறான ஒருவர் நியமிக்கப்படாவிட்டால், அந்த நியமனத்திற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு அதிக வாய்ப்பிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.





இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து நடத்திய இளைஞர் யுவதிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளித்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் திருமறைக்கலாமன்றத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதையும், கலைநிகழ்வையும், கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.
(படங்கள்:கே.நந்தகுமார்)

# திருட்டுக்கள் அதிகரிப்பு

மாவிட்டபுரம் தெற்கு ஜே/232 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட குடியிருப்புப்பகுதிகளில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துவருவதாக மக்கள் கவலை. தெரிவிக்கின்றனர். 27வருடங்களாக மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் தற்போது மீள்குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் இப்பகுதியில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து இருப்பது மக்களை துன்பத்திற்கு உள்ளாக்கி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர். குறிப்பாக இப்பகுதியில் உள்ள வீடொன்றில் ஒரு மாதத்திற்கு முன்னர் வாழ்வாதார மேம்பாட்டுக்கு வழங்கப்பட்ட கோழிகள் களவாடப்பட்டிருக்கின்றன. இதனால் அவ்வீட்டில் வசிப்போர் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (17)

# முரசின் இன்றைய பலன்

(15.01.2013 – செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 02 ஆம் திகதி. நட்சத்திரம் சதயம் முன்னிரவு 9.22 வரை. திதி சதுர்த்தி முன்னிரவு 8.25 வரை.
இராகுகாலம் 3.34 - 5.05 வரை.
சுபநேரம் 11.04 - 12.34 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிள்ளைகளால் சஞ்சலம். உயர்ந்தோர் உதவுவர். தொழிலில் புது நுணுக்கம். வரவை விட செலவு கூடும். தம்பதியர் ஒற்றுமை. உடல் பலம் பெறும். பொறுமை தேவைப்படும். |
| ரிஷபம் | மன்வருத்தம் தரும் நிகழ்வுகள். அதிக உழைப்பு அவசியம். எதிர்பார்த்த பணவரவு. எதிர்பாராத செலவுகள். உடல்நலம் கவனம். குடும்பத்தில் பாசம். பேச்சில் விரக்தி. சோர்வு. |
| மிதுனம் | நற்செயல்களில் ஈடுபாடு. கண்ணியம். திட்டமிட்ட உழைப்பால் வளர்ச்சி. சராசரி பணவரவு. உறவினர் வகையில் செலவு. சுபநிகழ்ச்சி திட்டம். திடீர் திருப்பங்கள் வரும் நாள். |
| கடகம் | எதிர்ப்புகள் தாண்டுவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயர்வு. புது நம்பிக்கை. அதிக பணவரவு. வீட்டுப்பொருள் வாங்குதல். தம்பதியர் ஒற்றுமை. அரச உதவி. |
| சிம்மம் | அன்பை பிரதானப்படுத்துவீர்கள். அதிக நற்பலன். தொழில், வியத்தகு முன்னேற்றம். லாபம் அதிகரிக்கும். விருந்து, விசேஷங்கள். தாயின் தேவை நிறைவேற்றுவீர். புத்திரரால் சலனம். |
| கன்னி | மறதியால் தொல்லை. அடுத்தவர் பணியையும் செய்ய நேரும். தொழிலில் அனுகூலநிலை. செலவு அதிகரிப்பதால், கவலை. உறவினர்களின் ஆதரவு. சீரான ஓய்வு நலம். |
| துலாம் | உதவுவீர்கள். கடின உழைப்பு. வரவை விட செலவு அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை ஓங்கும். மாணவர்கள் பொறுமை. உறவினர் வருகை. வாகனம், வீடு திருத்தம். அலைச்சல். |
| விருச்சிகம் | சந்தோசம் தரும் நிகழ்வுகள். புத்துணர்வும், செயல் திறனும் வளரும். தேவையான பணவசதி. அரசு வகையில் உதவி. உறவினர் வருகையால் மகிழ்ச்சி. தெய்வ வழிபாடு. |
| தனுசு | வெளியூர் பயணம் ஏற்படலாம். தொழில் வளரும். அதிக பணவரவு. உறவினர் நன்மதிப்புடன் நடத்துவர். ஆரோக்கியம். சுபசெய்தி வரும். மாணவர்களுக்கு உயர்ச்சி. |
| மகரம் | தர்மசங்கடமான சூழல்கள். வேலையில் குறுக்கீடுகள். நஷ்டம் வரலாம். பொறுப்பாக நடந்தால் நன்மை. நண்பருடன் பழைய நினைவு பகிர்வு. பயண மாறுதல். தாயினால் ஊக்கம். |
| கும்பம் | எல்லோரிடமும் அன்பாக இருப்பீர்கள். முக்கிய செயல் ஒன்று நிறைவேறும். பணியில் நேர்த்தி. தொழில் மன நிறைவு தரும். ஆதாய பணவரவு. எதிர்ப்புகள் விலகும். குடும்ப பாசம். |
| மீனம் | நியாய, தர்மத்தை அதிகம் பின்பற்றுவீர்கள். தீரமான செயற்பாடு. தொழில், புதிய பரிமாணம். பணவரவு திருப்தி. குடும்பத்தில் மங்கல நிகழ்வு. நண்பர் தேடி வருவார். |

# தரமான கலைப்படைப்புக்கள் மக்கள் மத்தியில் வெற்றி பெறும்

## கலைமாமணி கிறகரி கிறிஸ்தோப்பர்

(குருநகர்)

25 இலட்சம் ரூபாவுக்குமேல் செலவு செய்து தனிநிறுவனமாக நின்று குநாம வெளியீட்டகம் 'ஆளுமை' நாட்டுக் கூத்துக்கலைப்படைப்பை வெளிக்கொணர்ந்தது. த்யாரித்தல் என்பதும் அல்லாமல் அதனைத்தரமாக உருவாக்கியதன் காரணமாகவே சந்தைப்படுத்தல் முறையிலும் வெற்றியைப் பெற முடிந்தது.

மேற்கண்டவாறு குருநகர் நாட்டுக் கூத்து மன்றம் 'ஆளுமை' தொலைக்காட்சி திரைப்படத்தயாரிப்பு அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

படத்தின் தயாரிப்பாளரான மன்றத் தலைவர் 'கலைமாமணி' கிறகரி கிறிஸ்தோப்பர், செயலாளர் செல்ஸ்தியாம்பிள்ளை யூலன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, எமது நாட்டுக்கூத்து மன்றம் 2011ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் பல சிரமங்களின் மத்தியில் தயாரித்து வெளியிட்டுள்ள இந்தக்கலைப் படைப்பை நியாயமான ஆய்வுகளுக்கு உட்படுத்த் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், கல்விமான்கள் முன்வர வேண்டும்.

வேறு எத்தனையோ தனிநபர்களும், நிறுவனங்களும் இத்தகைய கலைப்படைப்புக்களை வெளிக்கொண்டுவர ஈடுபட்டு சில பகுதிகளைத் தயாரித்ததுடன் கைவிடப்பட்ட இயலாத் தன்மையும் இவ் வேளையில் நினைவு கூரத்தக்கது. அந்த வகையில் ஒப்பீட்டளவில் 'ஆளுமை' தொலைக் காட்சித் திரைப்படத்தின் ஆய்வு நிகழ்த்தப்பட வேண்டிய தேவையும், கட்டாயமும் தனியாக வற்புறுத்தப்படக்கூடிய ஒன்றாக அமைவதாகவே எமது குருநகர் நாட்டுக் கூத்து மன்றம் கருது கிறது. இவ்விதம் அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

# டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த வாய்க்கால்கள் துப்புரவாக்கல்

(கிளிநொச்சி)

யாழ். கண்டி வீதியில் வீதி அகலமாக்கும் பணிக்காக வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருந்த வாய்க்கால்கள் யாவும் துப்புரவாக்கப்பட்டுள்ளன. அண்மைய மழைக்கால நிலைமையில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயமிருந்ததை கருத்தில் கொண்டு இத்துப்புரவுப் பணிகளை வீதி நிர்மாணிக்கும் கம்பனியின் தொழிலாளர்கள் மேற்கொண்டனர்.

இதனால் அண்மைய மழைக்கால நிலையில் டெங்கு நுளம்பு அபாயம் பெருமளவில் தவிர்க்கப்பட்டது. ஆனாலும் இத்துப்புரவுப் பணிகள் வருடத்தின் பெரும்பாலான காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லாவிட்டால் கழிவு நீர் வாய்க்காலாக மாறும் இந்தத் தண்ணீர் வாய்க்கால்கள் நுளம்பு உற்பத்தி மையங்களாக மாறும் அபாயம் ஏற்பட்டுக் கொள்ளும்.

வீதி அபிவிருத்திக் கம்பனிகள் தமது பணியை முடித்துச் சென்ற பின்னர் இக் கழிவு வாய்க்கால்களின் துப்புரவுப் பணியில் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி அமைப்புக்கள் கவனம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. (90)

# சத்திரம் ஞானவைரவர் ஆலயத்தில் இன்று பட்டிப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

பசுக்கள் இடபங்களை பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையம் நடத்தும் பட்டிப்பொங்கல் விழா இன்று காலை 11 மணிக்கு யாழ். நகர் சத்திரம் ஞானவைரவர் ஆலய முன்றலில் இணையத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக கோபவனி இடம்பெறவுள்ளதுடன் ஆசியுரையை ஜனாதிபதியின் இந்துசமய இணைப்பாளர் பிரம்மஸ்ரீ ராமச்சந்திரக்குருக்கள் பாபுசர்மா வழங்கவுள்ளார்.

ஆசியுரைகளை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஜாக்ரத் சைத்தன்யா சுவாமிகள் ,பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாகிருஸ்ணயர் ஆகியோர் வழங்கவுள்ளனர். வாழ்த்துரைகளை பேராசிரியர் மா.வேதநாதன் சிவத்தமிழ் வித்தகர் சிவமாகலிங்கம் விகடகவி மு.திருநாவுக்கரசு ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா,கௌரவ விருந்தினர்களாக பூநகரி பிரதேச சபை தலைவர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா, லயன் தங்கராசா மற்றும் உள்ளூராட்சி சபை தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் விசேடமாக பங்குபற்றும் சகல மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுவதுடன் சகல அடியார்க்ளுக்கும் பசுப்பாலும் பாலன்னமும் வழங்கப்படவுள்ளது.

# புகையிலைச செயகை பாதியபு

(பருத்தித்துறை)

அண்மையில் பெய்த மழையினை அடுத்து புலோலி அல்வாய் மண்டான் ஆகிய பிரதேசங்களில் புகையிலைச் செய்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதால் புகையிலைச் செய்கையாளர்கள் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். இதேவேளை இப்பிரதேசத்தில் வயல் நிலங்களில் வெள்ள நீர் தேங்கி காணப்பட்டமையால் வெங்காயச் செய்கையும் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். எனினும் விவசாயிகள் தமது வயல்நிலங்களில் தேங்கிநின்ற மேலதிக நீரை வெளியேற்றியுள்ளனர் எனினும் வெங்காயச் செய்கையால் பயன் ஏதும் கிடைக்கவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (109)



# 2ஆவது சுற்றில் ஷரபோவா, வீனஸ்

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலியாவின் மெல்போர்னில் நடந்து வரும் அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் மரியா ஷரபோவா, வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் நேற்று கோலாகலமாக ஆரம்பமானது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. முதல் சுற்று ஆட்டம் ஒன்றில், 2ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, சகநாட்டு வீராங்கனை ஓல்க புச்கோவாவை எதிர்கொண்டார்.

இந்த போட்டியில் ஷரபோவா, 6-0, 6-0 என்ற நேர் செட்களில் எளிதில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில், அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் கஜகஸ்தானின் கலினாவுடன் மோதினார். இதில், வீனஸ் வில்லியம்ஸ் 6-1, 6-0 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார். இந்த ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டோனிக்கு கங்குலி ஆதரவு

(கொல்கத்தா)



டோனி விரைவில் இந்திய அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வார் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்துள்ளார்.

அணித்தலைவராக இருக்கும் ஒவ்வொருவருக்கும் இதுபோன்ற நெருக்கடியான சூழ்நிலை ஏற்படத்தான் செய்யும். இதிலிருந்து மீள டோனிக்கு சிறிது அவகாசம் தேவைப்படும். மைதானத்திற்கு வெளியே இருந்து எளிதாக விமர்சனம் செய்துவிடலாம். ஆனால் விமர்சிப்பதற்கு முன், ஒரு முறை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அணியில் இடம் பெற்றுள்ள இளம் வீரர்கள் தங்களது ஆட்டத்திறனை தக்கவைத்துக் கொள்ள சிறிது காலம் எடுத்துக் கொள்வார்கள். இத்தகைய நேரத்தில், அந்த அணி தோல்விகளை சந்திக்க நேரிடும். எனவே டோனி விரைவில் இந்திய அணியை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்வார் என்று நம்புகிறேன்.


பொதுவாக, தோல்வியின் போது அந்த அணியின் அணித்தலைவர் அதிகமாக விமர்சிக்கப்படுவார். நான் அணித்தலைவராக இருந்த போது கூட இதுபோன்ற நெருக்கடியை சந்தித்துள்ளேன். அப்போது அணியில் சச்சின், ராவிட், லட்ஸ்மன் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இருந்த போதிலும், ஒரு அணியாக் ஒன்று சேர சிறிது காலம் தேவைப்பட்டது.

வரும் 2015இல் அவுஸ்ரேலியாவில் நடக்கவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் இளம் வேகப்பந்துவீச்சாளர்களான அசோக் டிண்டா,ஷமி அகமது இடம் பெறுவார்கள்.அவுஸ்ரேலிய ஆடுகளத்திற்கேற்ப பந்துவீசும் திறமை இவர்களிடம் நிறைய உள்ளது. விரைவில் மனோஜ் திவாரி, புஜாரா போன்ற திறமையான துடுப்பாட்ட வீரர்கள் அணியில் நிரந்தர இடம் பிடிப்பார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



அவுஸ்ரேலியாவின் மெல்போர்ன் நகரில் இடம்பெறும் குழந்தைகள் ரென்னிஸ் தினத்தை முன்னிட்டு, சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரரின் மனைவி மிர்கா பெடரர், தனது இரட்டை பெண் குழந்தைகளான மைலா ரோஸ் மற்றும் சார்லின் ரிவா ஆகியோருடன் இருப்பதைக் காணலாம்.

# நிரூபணமானது குற்றச்சாட்டு விரைவில் நீதிமன்ற தீர்ப்பு





(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் ஆண்களுக்கான 100 மீற்றர் இறுதிப் போட்டியின்போது மைதானத்திற்கு பிளாஸ்டிக்போத்தலை வீசி எறிந்த நபர் மீது பொதுமக்களுக்கு ஊறுவிளைவித்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆஷ்லி ஜைல் வெப் என்ற 34 வயது நபர் ஆண்களுக்கான 100 மீற்றர் இறுதிப்போட்டியின் போது முன்வரிசையில் நின்று போட்டி ஆரம்பிப்பதற்கு முன் உசைன், நீ தோற்க வேண்டும். என கூச்சலிட்டு பிளாஸ்டிக்போத்தலை மைதானத்திற்கு வீசி எறிந்தார். இது தொடர்பில் நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்த வெப் மீது பொதுமக்களுக்கு ஊறு விளைவித்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனை இங்கிலாந்தின் ஸ்ட்ராட் போட் மாவட்ட நீதிமன்ற நீதிபதி வில்லியம் அஷடன் அறிவித்துள்ளார்.எனினும் இந்த குற்றச்சாட்டை வெப் மறுத்துள்ளார். குறித்த காலப் பகுதியில் அவர் மனநலம் பாதிக்கப்பட்டிருந்ததாக அவரது வழக்கறிஞர்கள் வாதிடுகின்றனர்.

2012 லண்டன் ஒலிம்பிக்கில் அதிகம் பேர் கண்டுகளித்த ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஜமைக்காவின் உசைன் போல்ட் தனது சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக்கொண்டார். எனினும் இந்த பிளாஸ்டிக் போத்தல் எறிந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.இந்நிலையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட ஜைல் வெப் மீதான நீதிமன்ற தீர்ப்பு எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

# தொடரை வெல்ல ஆஸி. முனைப்பு ஓய்வளிக்கப்பட்டோர் மீண்டும் இணைப்பு



(அடிலெய்ட்)

இலங்கை அணிக்கெதிரான அடுத்த இரு ஒரு நாள் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் ஓய்வளிக்கப்பட்ட கப்டன் கிளார்க் உட்பட முன்னணி வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரு போட்டிகள் நிறைவடைந்துள்ளன. இதில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவாக்கியுள்ளனர்.

இந்நிலையில் மூன்றாவதும், நான்காவது போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் முதலிரண்டு போட்டிகளில் ஓய்வு வழங்கப்பட்ட கப்டன் கிளார்க், விக்கெட்காப்பாளர் மத்தியூ வேட், ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் டேவிட் வோனர் ஆகியோர் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். மூன்றாவது ஒருநாள் போட்டி 18ஆம் திகதியும், 4ஆவது ஒருநாள் போட்டி 20ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: டேவிட் வோனர், பிலிப் ஹியூஸ், மைக்கல் கிளார்க், ஜோர்ஜ் பெய்லி,டேவிட் ஹசி, மத்தியூ வேட், கிளென் மக்ஸ்வெல், மொய்ஸஸ் ஹென்றிக்கஸ், ஜோன்சன், மிற்சல் ஸ்ரார்க், கிளின்ட் மக்காய், ஷேவியர் டொகேர்ட்டி.

# கிண்ணம் வென்றார் பெரர்



(ஓக்லாந்து)

ஓக்லாந்தில் நடந்த சர்வதேச ரென்னிஸ் தொடரில், ஸ்பெயினின் டேவிட் பெரர், நான்காவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

நியூசிலாந்தில் உள்ள ஓக்லாந்தில், சர்வதேச ரென்னிஸ் தொடர் நடந்தது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் டேவிட் பெரர், ஜேர்மனியின் பிலிப்பை சந்தித்தார். டைபிரேக்கர் வரை நீடித்த, இதன் முதல் செட்டை 7-6 என கைப்பற்றிய பெரர், இரண்டாவது செட்டையும் 6-1 என வென்றார்.

முடிவில், டேவிட் பெரர் 7-6, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, கோப்பை வென்றார். 2007, 11, 12இல் இங்கு கோப்பை வென்ற பெரர், இப்போது நான்காவது முறையாக சாதித்துள்ளார்.

# தொடரை வென்றது தென்னாபிரிக்கா

(பேர்த் எலிசபெர்த்)



நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவதுடெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இனிங்ஸ் மற்றும் 193 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக் கொண்டது. தென்னாபிரிக்க, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி தென்னாபிரிக்காவின் பேர்த் எலிசபெர்த்தில் நேற்று நிறைவடைந்தது.இதில் 404 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி, தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் இணைந்த வைற்லிங், பிராங்ளின் இணை நிதானமாக ஆடியபோதும் நீண்டதொருஇனிங்ஸை ஆட முடியவில்லை. இந்த ஜோடி 98 ஓட்டங்களை இணைப்பட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து விக்கெட் வேகமாக சரியத்தொடங்கியது. இறுதியில் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வைற்லிங் 63, குப்ரில் 48, பிராங்ளின் 53 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்டெயின் மூன்று, மோர்கன், ரொபின் பீற்றர்சன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன் மூலம் தென்னாபிரிக்க அணி இனிங்ஸ் மற்றும் 193 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. அத்துடன் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா 2-0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது.போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்டெயின் தெரிவானார். தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸ் 528/8. நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 121. நான்காம் நாள் ஆட்டத்தின் முன்பகுதிக்குள்ளே போட்டி நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.



வடமராட்சியில் கால்பந்தாட்டத்திற்குச் சேவையாற்றிய வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், கால்பந்தாட்ட உத்தியோகத்தர்கள் உட்பட பல வழிகளிலும் கால்பந்தாட்டத்திற்கு சேவையாற்றிய 10 பேருக்கு வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கினால் கௌரவிப்பு விழா நடத்தப்பட்டது. யாழ். கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கௌரவிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டோர் விபரம் வருமாறு: எஸ். கமலநாதன் (டயமன்ஸ் விளையாட்டுக்கழகம்), என். சுந்தரலிங்கம் (பீற்றர்) (சுடர்ஒளி விளையாட்டுக்கழகம்), இ. மெய்யழகன் (பொம்மேஸ் விளையாட்டுக்கழகம்), ஆர். இராசநாதன் (பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்), எஸ். செல்வராசா (நவசக்தி விளையாட்டுக்கழகம்), எஸ். அருமைத்துரை (சிவானந்தா விளையாட்டுக்கழகம்), எம். வரதராசன் (நக்கீரன் விளையாட்டுக்கழகம்), எஸ். வடிவேஸ்வரன் (கண்ணகி விளையாட்டுக்கழகம்), கே. பாக்கியராசா (மனோகரா விளையாட்டுக்கழகம்), கே. கணபதிப்பிள்ளை (அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம்) (12)

## விளையாட்டுச் செய்திகள்

# லீக் சுற்றுக்களில் வென்ற அணிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையில் லீக் முறையிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப் போட்டியில் கடந்த சனிக்கிழமை பெண்களுக்கான மூன்று போட்டிகளும் ஆண்களுக்கான ஒரு போட்டியும் நடைபெற்றன.

பெண்களுக்கான முதலாவது போட்டியில் கே.கே.எஸ் அணியினை எதிர்த்து உடுவில் மகளிர் அணி மோதியது. இப்போட்டியில் உடுவில் மகளிர் அணி 40:29 புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் பட்டர்பிளை அணியினை எதிர்த்து பெமிலியன் விளையாட்டு கழகம் மோதியது. இப்போட்டியில் பட்டர்பிளை அணி 47:43 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டியில் யாழ். இந்து மகளிர் அணியினை எதிர்த்து இராமநாதன் ஏ அணியுடன் மோதியது. இப்போட்டியில் இராமநாதன் ஏ அணி 40:34 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழக அணியினை எதிர்த்து முல்லைத்தீவு விளையாட்டு கழக அணியுடன் மோதியது. இப்போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 34:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

லீக் சுற்று முடிவில் புள்ளிகள் அடிப்படையில் அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு தெரிவாகும் என்றும், போட்டிகள் தொடர்ந்தும் மாலை 6.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்று வருவதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

# வடக்கின் கிரிக்கெட் அக்கடமி விரைவில் ஒட்டுசுட்டானில்

(யாழ்ப்பாணம்)

தேசிய, சர்வதேச ரீதியில் சிறந்த கிரிக்கெட் வீரர்களை உருவாக்கும் நோக்குடன் வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக "வடக்கின் கிரிக்கெட் அக்கடமி" விரைவில் உதயமாகவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் மத்திய மகாவித்தியாலயத்தில் இவ் மையம் உருவாக்கப்படவுள்ளது.

வயது வேறுபாடின்றி கிரிக்கெட் தெரிந்த, தெரியாதவர்கள் அனைவரும் இதில் பங்குகொள்ள முடியும் எனவும், தேசிய அணி வீரர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி முறைகள், மாதம் ஒருமுறை தேசிய பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டல் மற்றும் தேசிய கழகங்கள் மற்றும் வெளிநாட்டு கழகங்களுடன் விளையாடும் வாய்ப்பு என்பன வடக்கின் கிரிக்கெட் அக்கடமியால் உருவாக்கிக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜிம், நீச்சல், யோகா, தொழில்நுட்ப ரீதியிலான செயன்முறைகள் இவ் அக்கடமியில் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு மாகாண வீரர்களுக்கு இது பெரும் வரப்பிரசாதமானதாக அமையும் என்றும், வடக்கு மாகாண கிரிக்கெட் ஆர்வமுள்ள அனைவருக்கும் அடுத்த நிலை நோக்கிச் செல்வதற்கு பெரும் உந்து சக்தியாக வடக்கின் கிரிக்கெட் அக்கடமி திகழ வேண்டும் என கிரிக்கெட் ஆர்வலர்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

(93)

# பாடசாலை விளையாட்டை தேசியத்துடன் இணைக்கத் திட்டம்

(கொழும்பு)

பாடசாலை விளையாட்டை தேசிய விளையாட்டுடன் ஒருங்கிணைப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க விளையாட்டு அமைச்சும், கல்வி அமைச்சும் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான ஒருங்கிணைந்த தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகேயும் பந்துல குணவர்த்தனவும் கூட்டு அமைச்சரவைப் பத்திரத்தைக் சமர்ப்பிக்க உள்ளனர்.

விளையாட்டு அமைச்சின்செயலர் அநுரஜயவிக்ரம, கல்வி அமைச்சின் செயலர் கோதபாய ஜயரத்ன ஆகியோரின் தலைமையிலான ஒருங்கிணைப்பு குழு இந்த அமைச்சரவைப் பத்திரத்தை தயாரித்து வருகிறது.

பல தசாப்தங்களாக பாடசாலை விளையாட்டு, கல்வி அமைச்சின் கீழ் வேறுபிரிவாக இயக்கி வந்துள்ளது. இருந்தும் பாடசாலை மட்டத்தில் உருவாகும் திறமையான விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் தேசிய மட்டத்துக்குக் கொண்டு செல்ல முறையான திட்டங்கள் மேற் கொள்ளப்படவில்லை.

இதனால் பாடசாலை விளையாட்டுத் துறையில் திறமைகளை வெளிக்காட்டுவோருக்கு தேசிய, ச ர்வதேச மட்டம் வரை செல்ல தடைகள் ஏற்பட்டிருந்தன. இதனை இல்லாது செய்ய இந்தத் திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

அந்த வகையில் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், ஸ்ரான்லிக் கல்லூரி அணிக்குமிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி இன்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணிகள் என்பதால் இப்போட்டி மிகுந்த பரபரப்பாக இடம்பெறும் என இரு அணி ஆதரவாளர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)

# சிறுவர்போராளிகள் எதிர்நோக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் 2

– ருவான் எம் ஜயதுங்க –

சில இலங்கை இராணுவ புலனாய்வு அதிகாரிகளின் கூற்றுப்படி, எல்.ரீ.ரீ.ஈ 1984இற்கு பிற்பட்ட காலத்திலிருந்தே சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்து வந்தது, அவர்களை விரிவான வகையில் உளவு பார்க்கும் பணியில் பயன்படுத்தியதன் விளைவாக இலங்கை ஆயுதப்படைகளுக்கு எதிரான தாக்குதல்களில் அவர்களைப் பயன்படுத்தியது. சில சிறுவர்களுக்கு மிகத் தீவிரமான ஆபத்து நிறைந்த பணிகளான, ஜொனி பட்டா என்றழைக்கப்படும் ஆட்களுக்கு எதிரான கண்ணிவெடிகளை புதைப்பதற்கு கூட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

“1990 களுக்கு பிறகு தமிழ் புலிகளினால் சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்வது நிறுவனமயமாக்கப்பட்டது. புலிகள், தாங்கள் சிறுவர் போராளிகளைப் பயன்படுத்துவதில்லை என்று தாங்களே மறுப்பு தெரிவித்தார்கள், ஆனால் அவர்களிடம் இருந்ததாக மதிப்பிடப்பட்ட 7000 - 10000 போராளிப் படைகளில் பாதிவரையிலானவர்கள் பெண்களாகவும் மற்றும் 20 - 40 விகிதம் வரையானவர்கள் சிறுவர்களுமாக இருக்கலாம்” (சோமசுந்தரம் 2002). 1983இல் இலங்கையில் ஆயுதப் போராட்டம் வெடித்தபோது, வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலிருந்த சிறுவர்கள்தான் கணிசமானளவு பாதிப்புக்கு உள்ளானார்கள். அநேக பிள்ளைகள் யுத்தம் தொடர்பான கூட்டுச் சேதத்துக்கு பலியானார்கள். போராட்டம் அவர்களின் கல்வி மற்றும் சமூக நலன்களைப் பாதித்தது. அரசாங்கப் படைகளை எதிர்த்து போராட கிளர்ச்சியாளர்களுக்கு மேலும் மேலும் மனித வளம்





தேவைப்பட்டதால் அவர்கள் கட்டாயமாக சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்யத் தொடங்கினார்கள். அநேக பணம் படைத்த மற்றும் கல்வியறிவு மிக்க குடும்பத்தினர் தங்கள் பிள்ளைகளை காப்பாற்றுவதற்காக, இந்தியா, ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு தப்பி ஓடினார்கள். சலுகைகளற்று வாடும் குடும்பங்களுக்கு எந்தத் தெரிவும் இருக்கவில்லை. அமைப்பு கோரிக்கை எழுப்பியபோது, அவர்களுக்கு தங்கள் பிள்ளைகளை எல்.ரீ.ரீ.ஈயிடம் கையளிக்க வேண்டியிருந்தது. இந்தப் பிள்ளைகள் தமிழ் புலிகளுக்கு ஒரு விரிவாக்கக் கூடியதும் மற்றும் நடத்திச் செல்லக்கூடியதுமான ஒரு வளமாக இருந்தது. பெரும்பாலும் பல்வேறு பிராந்திய கிளர்ச்சித் தலைவர்களும் நடத்தும் போராட்டங்களில் இந்தச் சிறார்கள் முன்னணி வரிசை போராட்டப் படையாக பயன்படுத்தப்பட்டு வந்தார்கள். எல்.ரீ.ரீ.ஈ இந்த சிறுவர் போராளிப் பிரிவினரை குழந்தைப் பட்டாளம் எனும் கருத்துக் கொண்ட “பேபி பிரிகேட்” என அழைத்தார்கள், மற்றும் இந்த சிறுவர் போராளிகள் போர் நடவடிக்கைளுக்கு கட்டாயப் படுத்தப்பட்டார்கள். இதன் விளைவாக இந்தப் பிள்ளைகள் “இலங்கையின் இழந்துபோன ஒரு தலைமுறையாக” மாறினார்கள்.

ஐ.நா.வின் கூற்றுப்படி, இலங்கை யில் தொடர்ந்து நடைபெற்று வந்த ஆயுத மோதலின்போது தமிழ் புலிகள், ஆயிரக்கணக்கான சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்தார்கள், இதனால் அந்தச் சிறுவர்களுக்கு கல்வி, ஆரோக்கியமான சமூக தொடர்புகள் என்பன மறுக்கப்பட்டதோடு, எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களின் மனித உரிமைகளும் மீறப்பட்டுள்ளன. இந்தச் சிறுவர்கள் ஈழப் போரின்போது கொடூரமான வன்முறை, சித்திரவதை என்பவைகளை வெளிப்படுத்தியதோடு அதன் மோசமான விளைவுகளுக்கும் சாட்சிகளாக இருந்துள்ளார்கள். அதிலிருந்து உயிர் பிழைத்த அநேகர் இன்னமும் தங்கள் கடந்தகால பேரதிர்ச்சியிலிருந்து விடுபட முடியாதவர்களாகவே வாழ்கிறார்கள். அது அவர்களின் அறிவாற்றல், தார்மீக நெறியாற்றல் மற்றும் சுய முன்னேற்றம் என்பனவற்றை பெருமளவில் பாதித்துள்ளது. இந்தச் சிறார்கள் பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளார்கள். இலங்கை ஆயுதப் படைகளுடன் போரிடுவது மட்டுமன்றி பல நூறாண்டுகளாக இருந்துவரும் தமிழ் சமூகங்களை சீர்குலைக்கும் பணிகளுக்காகவும் இவர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். இந்த அப்பாவிச் சிறுவர்களை சிறுவர் போராளிகளாக மாற்றியதின்மூலம், பாரம்பரியமாக சமாதானமும், அகிம்சையும் செழித்திருந்த தமிழ் கலாசார மதிப்புகளை எல்.ரீ.ரீ.ஈ தனது விருப்பப்படி சீர்குலைத்தது. பிள்ளைகள் கடத்தப்பட்டபோது அநேக குடும்பங்கள் பிரிந்தன அல்லது அந்த இடத்தை விட்டு வெளியேறின. பாதிக்கப்பட்ட மற்றும் தகர்ந்துபோன சமூக அங்கத்தவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தெரிவே இருந்தன, மற்றும் தாங்கள் உயிர்வாழ்வதற்காக அநேகர் எல்.ரீ.ரீ.ஈ யில் சேரும் நிலைக்கு ஆளானார்கள்.

(தொடரும்)

# நீங்கள் விரும்பும் பெண் இவரா?



அமெரிக்காவைச் சேர்ந்த, ஆண்களுக்கான பிரத்தியேக, இணையதள நிறுவனம், ஆண்டுதோறும், “உலகிலேயே, உங்களால் அதிகம் விரும்பப்படும் பெண் யார்?” என்ற கேள்வியை கேட்டு, அதன் முடிவுகளை வெளியிட்டு வருகிறது.

இந்தாண்டுக்கான கருத்துக் கணிப்பில், முதலிடத்தை தட்டிச் சென்றுள்ளவர், பிரபல ஹொலிவுட் நடிகை, ஜெனிபர் லோரன்ஸ். இவருக்கு, 22 வயது தான் ஆகிறது. மெழுகுச் சிலை போன்ற, இவரது தோற்றமும், அசத்தலான அழகும், பலரையும் கிறங்கடித்து விட்டது.


“இவர் தான், எனக்கு பிடித்த பெண்” என, 24 இலட்சம் பேர், ஏகமனதாக, ஜெனியை தேர்வு செய்துள்ளனர். மற்றொரு பிரபல ஹொலிவுட் நடிகை, மிலா குனிஸ், இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். இணையதள நிர்வாகி, ஜேம்ஸ் பசில் கூறுகையில், “ப்ரிட்ஜில் வைத்த அப்பிள் போல், எப்போதும் பிரஷ்ஷாக தோற்றமளிப்பதால் தான், ஜெனியை, பலருக்கும் பிடித்துள்ளது. அத்துடன், நடிக்க வந்து, நான்கு ஆண்டுகள் ஆகியும், இதுவரை எந்த சர்ச்சையிலும் அவர் சிக்கவில்லை என்பதும், மற்றொரு முக்கிய காரணம்... ” என்கிறார்.

# காசினோக்களில் தில்லாலங்கடி!

வெளிநாடுகளில் சூதாடுவதற்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் தான் காசினோக்கள். கோடிகள் சர்வசாதாரணமாக புரளும் இந்த இடத்தில் தில்லுமுல்லு செய்ய ஏகப்பட்ட தில் வேண்டும். மாட்டிக்கொண்டால் தோலை உரித்து தொங்கவிட்டு விடுவார்கள். ஆனால் இப்படிப்பட்ட இடத்திலும் தில்லாலங்கடி வேலை காட்டுவதிலும் கில்லாடி ரிச்சர்ட் மார்கஸ். கண் இமைக்கக் கூட காத்திராமல் டோக்கன் மாற்றுவது ரிச்சர்ட் மார்கசின் திறமையான தந்திரம். காசினோக்களில் பணத்தை கவுண்டரில் கொடுத்து டோக்கன்களாக மாற்றிக்கொள்ள வேண்டும். ஒரு டொலர் முதல் பல ஆயிரம் டொலர்கள் வரை பணத்தின் மதிப்புக்கு ஏற்ப கலர்கலராக டோக்கன்கள் கொடுப்பார்கள். மார்கஸ் வெறும் 3 டோக்கன்களோடுதான் தனது ஆட்டத்தை ஆரம்பிப்பார்.

அவரிடம் ஒரு 100 டொலர், இரண்டு 5 ஆயிரம் டொலர் டோக்கன்கள் மட்டும்தான் இருக்கும். ஒருவேளை தோற்றுவிட்டால் 5 ஆயிரம் டொலர் டோக்கன்களுக்கு பதிலாக மைக்ரோ செக்கன்களில் 100 டொலர் டோக்கன்களாக மாற்றிவிடுவார். இதனால் மார்கசிற்கு 300 டொலர் மட்டுமே நஷ்டம். ஜெயித்துவிட்டால் டோக்கன்களை மாற்ற மாட்டார்கள். இவருக்கு 10 ஆயிரத்து 100 டொலர்கள் லாபம். இதனால் 33 முறை தோற்றாலும் கூட ஒருமுறை ஜெயித்தாலே லாபம் பார்த்துவிடலாம். மார்கஸ், காசினோ, காசினோவாக மாறிமாறி ஏறி ஏமாற்றினார். 25 ஆண்டுகளாக குறைந்தபட்சம் 5 மில்லியன் டொலர்கள் வரை இப்படி ஏமாற்றி சம்பாதித்துவிட்டாராம்.

ஆனால் அதை யாரும் கண்டுபிடிக்கவில்லை. அவரே பொறுமை இழந்து தி கிரேட் காசினோ ஹெயிஸ்ட் [illegible]ற நூலை எழுதி அதில் தனது தில்லாலங்கடி வேலைகளைப் பற்றி சொன்னார். காசினோ உலகம் அதிர்ந்து போனது. காசினோக்கள் எப்போதும் பரபரப்பாகவும், பதற்றமாகவும் இருக்கும். நாம் பரபரப்பின்றி பதற்றமின்றி செயல்பட்டால் சுலபமாக ஏமாற்றிவிடலாம் என்பது மார்கசின் டிப்ஸ். காசினோ விரும்பிகள் மத்தியில் இந்தப் புத்தகம் பெரு வரவேற்பை பெற்றது.





# நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க...

- இரவு நேரங்களில் அசைவ உணவு மற்றும் கீரை வகைகள், தயிர் ஆகியவற்றை அறவே தவிர்த்துவிடுவது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும்.

- துளசி இரத்தத்தை சுத்திகரிக்கிறது என்று பொதுவாக எல்லாரும் சொல்வார்கள். வெண்குருதிச் சிறுதுணிக்கைகளை அதிகரித்து, அதன் வகைகளை சரியான விகிதத்தில் இருக்கும்படி பார்த்துக் கொள்வதுதான் துளசி, கற்பூரவல்லி போன்றவற்றின் வேலை. எனவே நோய்வாய்ப்பட்டிருக்கும் சமயத்தில் இவற்றை தாராளமாக எடுத்துக் கொள்ளலாம்.

- "மனம் கவலைப்படுகிறது உறுப்புகள் அழிகின்றன" என்று ஒரு பழமொழியே உண்டு. உடலில் வரும் வியாதிகளுக்கும் மனதுக்கும் அத்தனை நெருக்கமான தொடர்பு உண்டு, உண்மைதான். அடிக்கடி கோபம் கொள்கிறவர்களுக்கு இதயக் கோளாறும், எப்போதும் கவலைப்படுகிறவர்களுக்கு அல்சர் போன்ற வியாதிகளும் வருவதை எதிர்ப்புச் சக்தி தடுப்பதில்லைதானே!

- இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவு குறைந்தால் நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்துவிடும். அந்த வகையில் அப்பிள், பப்பாசி, அன்னாசி, வாழைப்பழம், பேரீச்சை, மாம்பழம், மாதுளை, கொய்யா, தோடம்பழம், நாவல், வெண்டிக்காய், பேரிக்காய், வெள்ளரிக்காய், கோவைக்காய், கரும்புச்சாறு, இளநீர் போன்றவை நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் அருமருந்துகள்.

- பதப்படுத்தப்பட்ட குளிர்பானங்களை தவிர்த்து உடனுக்குடன் தயாராகும் பழச்சாறுகளை எடுத்துக்கொள்வது நல்லது. பதப்படுத்தப்பட்ட பானங்களில் உள்ள இரசாயனப்பொருள்கள் நோய் எதிர்ப்புச் சக்தியை குறைக்கும். வயிற்று உபாதைக்ளையும் உண்டாக்கும்.

# பல்கலைக் கழகத்தினுள்ளிருந்து ஒரு கடிதம்...

இப்போதெல்லாம், யாழ். பல்கலைக்கழகத்தினுள்ளும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நிர்வாகிகளும் தங்களிடையே உள்ள மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படையாக விவாதித்து வருவதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. அங்கிருந்து நேரடியாக எம்மைத் தொடர்புகொண்டு பேசிவருபவர்களும், கடிதம் மற்றும் மெயில்கள் ஊடாகவும் பலவித முரண்பட்ட கருத்துக்களையும் வெளியிட்டு வருகிறார்கள். விமர்சனங்களை அச்சுறுத்தலால் அடக்கிவிட்டு, ஒரே கருத்தையே எல்லோரும் பேச கடந்த காலத்தில் நிர்ப்பந்தித்ததன் பாதிப்புகளை இப்போது கல்விச்சமூகம் உணர்ந்துகொண்டிருப்பதையே இது காட்டுகிறது. பல குரல்களையும் ஒலிக்க விடுவதன் முக்கியத்துவம் கருதியே இன்று பெயர்கள் குறிப்பிடாமல் எமக்கு வந்த இம்மின்னஞ்சல் கடிதத்தினை இங்கு வெளியிடுகிறோம்.

## தங்கள் வயிற்றில் அடிவிழப் போகிறதென்றவுடன் கொள்கையை விட்டெறிந்த நிர்வாகிகள்

உயர் கல்வி அமைச்சரைச் சந்தித்து வீடு வரும் வழியிலேயே வெளிநாட்டு வானொலிகளுக்கும், தாங்கள் சொல்லும் பொய்களையே ஆதாரமாகக் கொண்டு பிழைப்பு நடத்தும் பத்திரிகைகளுக்கும் பேட்டி கொடுத்த பல்கலைக்கழக அதிகாரிகள், நாட்டுக்கு மட்டுமல்ல, அவர்களை நம்பி (ஏமாந்து) பின்னால் நிற்கும் தமிழ் மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் கூட துரோகம் இழைக்கிறார்கள். பல்கலைக்கழகத்திடம் சம்பளம் வாங்கிக்கொண்டு பல்கலைக்கழகத்துக்கெதிராகச் சிலபத்திரிகைகளுக்குச் செய்தி கொடுக்கும் பத்திரிகை நிருபர்கள் இவர்கள். உயர் கல்வி அமைச்சர் ஆங்கிலத்தில் பேசியதைத் தவறாக வேறேதோ புரிந்து கொண்டு, தமது கற்பனையில் வருவதெல்லாம் சொல்லும் இவர்களை நம்பிச் செய்தி வெளியிடும் பத்திரிகைகளையும், இவர்களது பொய்களை நம்பி ஏமாற வேண்டாமென்று அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

அந்த 4 மாணவரையும் விடுவிக்கும் வரை படிப்பிக்க மாட்டோம் என்றவர்கள் உயர்கல்வி அமைச்சர் "பல்கலைக்கழகத்தை கால வரையின்றி மூடவேண்டி வரும்" என்று குளிசை கொடுத்தவுடன் ஓடோடி வந்து தொடங்கிய சுயநலம் மக்களுக்குப் புரிய வேண்டும். பல்கலைக்கழகமானது அரசாங்கத்தினால் மூடப்பட்டால், அரசாங்கத்திடமிருந்து சம்பளம் வாங்கிக்கொண்டு, அரசாங்கத்துக் கெதிராகச் செயற்படுவதாகக் காட்டிவரும் இவர்களுக்கும் கூட மாதச்சம்பளம் காலவரையின்றி நிறுத்தப்படும். தமது வயிற்றில் அடிவிழப் போகிறதென்றவுடன் தம்மை நம்பி நிற்கும் தமிழ் மாணவர்களையும், பெற்றோரையும் தனியே தவிக்க விட்டுத் தப்பியோடும் இவர்களை நம்பி தமிழ் மக்கள் ஏமாற வேண்டாம் என்று தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

**யாழ். பல்கலைக்கழகத்தின் பெருமையை மீட்டெடுக்க விரும்புவோர்.**

# முத்துசுவாமி தீட்சிதர்



சென்னை அருகே இருக்கும் மணலி, அந்தக்காலத்தில் பெரிய ஜமீனாக இருந்தது. அங்கு கிழக்கிந்திய கம்பெனியின் துபாஷாக இருந்த முத்துகிருஷ்ண முதலியார் பெரும் செல்வந்தர். கலையன்பர். ஒருசமயம், திருவாரூர் வந்தபோது கோயிலில் ராமசுவாமி தீட்சிதர் பாடிய பஜனைப் பாடல்கள் அவரை மிகவும் கவர்ந்தன.

அவரைக் குடும்பத்தோடு மணலிக்கு வந்து தன் ஜமீனில் சமஸ்தான வித்வானாக இருக்க வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டு அவரை மணலிக்கு அழைத்து வந்தார், முத்துகிருஷ்ண முதலியார்.

மணலியில் ராமசுவாமி தீட்சிதரின் இசைப் புலமை வெகுவாகப் பரவ மிகவும் புகழ் பெற்று விளங்கினார் ராமசுவாமி தீட்சிதர். இவர்தான் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதரின் தந்தை.

சிறிது காலத்தில் துபாஷ் முத்துகிருஷ்ண முதலியார் காலமாக, அவரது மூத்த மகன் வெங்கடகிருஷ்ண முதலியார் துபாஷ் ஆனார். இவரும் தந்தையைப் போலவே ராமசுவாமி தீட்சிதர் குடும்பத்தைப் போஷித்து வந்தார்.

வெங்கட கிருஷ்ண முதலியார் கிழக்கிந்திய கம்பெனியுடனும் கவர்னருடனும் நெருங்கிய தொடர்புடையவர். அதனால் கவர்னரைச் சந்திக்க அவர் சென்று வரும்போது தன்னுடன் முத்துசாமி தீட்சிதரையும் அவரது சகோதரர்களையும் கூடவே அழைத்துச் செல்வார். கோட்டையில் நடைபெறும் பாண்ட் வாத்தியக் குழுவினரின் மேனாட்டு இசையை விரும்பிக் கேட்டு ரசிப்பார் முத்துசாமி தீட்சிதர். மேனாட்டு மெட்டுகளை உள்வாங்கிக் கொண்டு அவற்றை கர்நாடக இசையுடன் இணைத்துப் பார்த்து மகிழ்வார். பிறகு ஆங்கில நோட்ஸ்களுக்கு சமஸ்கிருத சொற்களை அமைத்துக் கொடுத்தது தீட்சிதர் செய்த பெரிய புரட்சி. மேனாட்டு இசைக் கருவிகளில் முத்துசுவாமி தீட்சிதருக்கும் அவரது இளவல் பாலுசுவாமிக்கும் மிகவும் பிடித்துப் போனது வயலின்தான்!


வெங்கடகிருஷ்ண முதலியார் ஐரோப்பிய ஆசிரியர் ஒருவரை அழைத்துவந்து முத்துசுவாமி தீட்சிதரின் தம்பி பாலுசுவாமிக்கு வயலின் கற்றுத்தர ஏற்பாடு செய்தார். மூன்று வருட பயிற்சிக்குப் பிறகு பாலுசுவாமி வயலின் வாசிப்பில் நிபுணர் ஆகிவிட்டார்.

அண்ணன் முத்துசாமி தீட்சிதர் வீணை வாசிக்க, தம்பி பாலுசுவாமி பக்கவாத்தியமாக வயலின் வாசிக்க பல கச்சேரிகள் அமர்க்களமாக நடைபெற்றன. அன்றிலிருந்து கர்நாடக இசைக் கச்சேரிகளுக்கு வயலின் இன்றியமையாத பக்க வாத்தியமாக மாறிவிட்டது. இந்தப் பெருமை முழுவதும் தீட்சிதர் சகோதரர்களையே சேரும்.

**- ('சங்கீத மும்மூர்த்திகள்' என்ற நூலில் வீயெஸ்வி)**

உன் உள்ளத்துக்கு வருத்தம் விளைவிக்காதே!
உன் திட்டங்களால் உன்னையே துன்பத்துக்கு உட்படுத்தாதே!
உள்ள மகிழ்ச்சியே மனிதரை வாழவைக்கிறது.
அகமகிழ்வே மானுடரின் வாழ்நாளை வளரச்செய்கிறது
உன் உள்ளத்துக்கு உவகையூட்டு.
உன்னையே தேற்றிக்கொள்.
வருத்தத்தை உன்னிடமிருந்து தொலைவில் விரட்டிவிடு
வருத்தம் பலரை அழித்திருக்கிறது.
அதனால் எந்தப் பயனுமில்லை.
பொறாமையும் சீற்றமும் உன் வாழ்நாளைக் குறைக்கும்.
கவலை உரியகாலத்துக்கு முன்னரே
முதுமையைக் கொண்டுவரும்.
மகிழ்ச்சியான நல்ல உள்ளம்
நல்லுணவை சுவைத்து இன்புறுகிறது.

**(பழைய ஏற்பாடு. சீராக் 31 / 21-25)**



# போதனா வைத்தியசாலைகளில் சுகாதாரமேம்பாட்டு மறுசீரமைப்பு

(கொழும்பு)

சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இலங்கையிலுள்ள 10 போதனா வைத்தியசாலைகளை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை ரெக்கிட் பென்கீசர் நிறுவனத்தின் முன்னணி வர்த்தக நாமமான டெட்டோல், முன்னெடுக்கவுள்ளது.




இந்த நிகழ்ச்சிக்கான திட்ட முன்மொழிவு அண்மையில் பொலனறுவையில் வைத்து சுகாதாரத்துறை அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன் ஓர் அங்கமாக, பொலனறுவை போதனா வைத்தியசாலையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை இந்நிறுவனம் ஆரம்பித்திருந்தது.

இந்த மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் பொலனறுவை, யாழ்ப்பாணம், பலப்பிட்டிய, குருநாகல், ராகம, மாத்தறை, புத்தளம், நீர்கொழும்பு, கேகாலை மற்றும் பேராதனை ஆகிய பிரதேசங்களில் உள்ள போதனா வைத்தியசாலைகள் மறுசீரமைக்கப்படவுள்ளதுடன், தற்கால தேவைகளுக்கு இணையான நவீன தரத்துடன் வசதிகள் புதுப்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டம் குறித்து ரெக்கிட் பென்கீசர் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் ராகுல் முர்காய் கருத்து தெரிவிக்கையில்.

குடும்ப சுகாதாரத்தின் அவசியம் குறித்து அக்கறை செலுத்தும் வர்த்தக நாமமாக டெட்டோல் காணப்படுகிறது.

ஒரு குடும்பத்தின் நலன், நாளாந்தம் மேற்கொள்ளும் சரியான தெரிவுகளில் தங்கியுள்ளது. சர்வதேச ரீதியில் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஏற்படுத்தும் வர்த்தக நாமமாக டெட்டோல் திகழ்கிறது.

எனவே, எமது கூட்டு சமூகப் பொறுப்புணர்வு திட்டங்கள் சுகாதாரத்தை நோக்காக கொண்டு முன்னெடுக்கப்படுகிறது. இதனூடாக சுகாதாரம் மற்றும் முதலுதவி போன்றவற்றை மேம்படுத்தி நாட்டில் சிறந்த சூழலை கட்டியெழுப்ப முடியும் என்றார்.

# சர்வதேச லயன்ஸ் கழக ஆளுநர் உத்தியோக பூர்வ விஜயம்

(பருத்தித்துறை)

சர்வதேச லயன்ஸ் கழக 306B1 இன் மாவட்ட ஆளுநர் இன்று நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்திற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இது தொடர்பான வரவேற்புக்கூட்டம் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நெல்லியடி லயன்ஸ் வட்ட தலைவர் ரி.யோகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இங்கு வருகை தரும் ஆளுநரையும் அவரது பாரியார் லயன் சீமாட்டி ஜெகஜோதி தங்கராசாவையும் நெல்லியடி லயன்ஸ் கழக உறுப்பினர்கள் வரவேற்று கௌரவிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் நலிவுற்றவர்களின் மேம்பாடுகருதிய சீட்டிழுப்பும் இடம்பெறும் என லயன்ஸ் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

(01)

# அவிசாவளை சிறை தற்காலிகமாக மூடல்

(கொழும்பு)

அவிசாவளை தடுப்புக்காவல் சிறை தற்காலிகமாக மூடப்பட்டது. என்று சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

தடுப்புக்காவல் சிறையை புனரமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையிலேயே சிறை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. என்றும் அவர் தெரிவித்தார். வழக்கு நடவடிக்கைகளில் ஆஜர்படுத்தப்படவேண்டிய கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு தற்காலிகமாக மாற்றப் பட்டுள்ளனர்.

அவிசாவளை தடுப்புக்காவல் சிறையை உடைத்துக்கொண்டு கைதிகள் 10 பேர் கடந்தவாரம் தப்பிச்சென்றதுடன் அதில் மூன்றுபேர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தற்காலிக உணவு நிலையங்களை கண்காணிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரில் இரவு வேளைகளில் மாத்திரம் தற்காலிகமாக நடத்திச் செல்லப்படும் உணவு விற்பனை நிலையங்கள் தொடர்பில், கொழும்பு மாநகர சபை கவனம் செலுத்தியுள்ளது. குறித்த உணவு விற்பனை நிலையங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மாநகரசபையின் சுகாதாரப்பிரிவு கூறியுள்ளது.

குறிப்பாக இந்த விற்பனை நிலையங்களில் உரிய தரத்தில் உணவுகள் தயாரிக்கப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் எதிர்வரும் காலங்களில் இந்த விற்பனை நிலையங்களில் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளவுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி அசுத்தமான முறையில் உணவுகளை விற்பனை செய்யும் நிலையங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ரிசானாவின் மரண தண்டனைக்கு சவுதி அரசாங்கம் பதிலளிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பணிப்பெண் ரிசானா நபீக்கிற்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் எழுந்துள்ள விமர்சனங்களுக்கு சவுதி அரேபிய அரசாங்கம் பதிலளித்துள்ளது. பணிப்பெண்ணுக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு செயற்படுத்தப்பட்டமை தொடர்பில் ஐ.நா.செயலாளர் நாயகம், ஐரோப்பிய ஒன்றியத்தின் உப தலைவர் உள்ளிட்ட மேலும் சில அமைப்புக்களின் பிரதிநிதிகள் வெளியிட்டுள்ள அறிக்கைகள் கவலையளிப்பதாக சவுதி அரேபிய செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

குறித்த அறிக்கைகள் தவறான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளதாகவும் சவுதி அரேபிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நான்கு மாத சிசுவை கொலை செய்தமை தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்ட ரிசானா நபீக் ஒரு சிறுமி என சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


ரிசானா நபீக்கின் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டில் அவருக்கு 21வயது என குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் சவுதி அரேபிய அதிகாரிகள் அந்தக் கடவுச்சீட்டு இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட, உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்படும் ஆவணம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சிறுவர்களை தொழிலில் அமர்த்துவதற்கு சவுதி அரேபிய அரசாங்கம் அனுமதிப்பதில்லை எனவும் சவுதி அரேபிய செய்திச் சேவை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிசானா நபீக் விடயத்தில் நியாயமான வழக்கு விசாரணைகள் நடத்தப்படவில்லை என சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டையும் சவுதி அரேபிய அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னரும் கொலைசெய்யப்பட்ட சிசுவின் பெற்றோரிடமிருந்து ரிசானாவிற்கு மன்னிப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு தமது அரசாங்கம் அதிகபட்ச முயற்சிகளை மேற்கொண்டதாக அவர்கள் கூறியுள்ளனர்.

# பசுக்களை வணங்குவோம் போற்றுவோம்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற இறைவனுக்கு வேண்டிய அபிஷேகத் திரவியங்களைக் கொடுக்கின்ற பசுமாடு எமக்கு ஒரு நிறைந்த செல்வமாகும். பசுக்கள் சாதுவானவை. பசுக்களின் உடம்பிலே தெய்வங்கள் உறைந்திருப்பதாக நம்முன்னோர்கள் கூறியுள்ளனர். அத்துடன் நெல் வயலில் பாடுபட்ட உழவர்களோடு மாடுகளும் சேர்ந்து பாடுபட்டிருக்கின்றன. அதனால் தான் நேற்றுத் தைப்பொங்கல் இன்று பட்டிப்பொங்கல்

வயல் உழுவதற்கும் மற்றும் போக்கு வரத்துக்கும் உதவிய காளை மாடுகளுக்கும் பால் தந்து உணவளித்துச் சுகவாழ்வு தந்த பசுக்களுக்கும் இன்று ஒரே கொண்டாட்டம். பசு ஒரு தெய்வீகப் பிராணி. ஒரு காரியத்துக்குப் புறப்படும் போது பசுமாடு எதிரில் வந்தால் அது நல்ல சகுனம் என்பார்கள். அத்துடன் முற்காலத்தில் ஒரு நாட்டின் செல்வம் பசுமாடுகளே என்ற நம்பிக்கை நிலவியது. போர் செய்து நாட்டை பிடிக்க எண்ணும் அரசன் முதலில் பசு நிரைகளையே கவர்ந்து செல்வானாம். பசுக் கூட்டத்தைப் பிடித்துச் சென்று விட்டால் நாட்டின் பெருஞ்செல்வத்தையே கவர்ந்த மாதிரி.

**இன்று பட்டிப்பொங்கல்**

தேவாரம் பாடிய நாயன்மார்களும், "ஆவினுக்கரங்கலம் அரனஞ்சாடுதல்'' என்றும் "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்றும் பாடியிருப்பது இவண் நோக்கத்தக்கது.

அந்த வகையில் பசுக்களின் பெருமை சொல்லி முடியாது பசுக்கன்று தன் தாய்ப்பசுவை "அம்மா" என்று தான் அழைக்கிறது. குழந்தையும் "அம்மா" என்றுதான் அழைக்கின்றது. ஆதலால் பசுவை நாங்கள் வணங்க வேண்டுமே தவிர வதைத்து உண்ணக் கூடாது.

தெய்வீகம் நிறைந்த பசு மாட்டை வெட்டி அதன் இறைச்சியை உண்பது கொடிய பாவம். ஒரு பசுவை கொன்றால் ஆயிரம் பிராமணர்களைக் கொன்ற பாவம் வந்து சேரும் என்று கூறப்படுகிறது.

எனவே பசு மாட்டை வணங்கி வாழ்த்தி மகிழ வேண்டுமே தவிர வதக்கி உண்ணலாகாது.

இன்றைய பட்டிப்பொங்கல் நாளில் பசுவை வணங்கி, இனிய பொங்கல் பொங்கிப் படைத்து அதனுடைய ஆசியைப் பெற்று நல்வாழ்வு வாழத்தலைப்படுவோமாக.

**"கோ மாதா எங்கள் குலமாதா"**

**சிவநெறிக்கலாநிதி**
**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

# அர்ப்பணிப்பு செய்யத்தயார்

## சரத்பொன்சேகா

(கொழும்பு)

நாட்டிற்காக அர்ப்பணிப்புச் செய்யத் தயார். புத்தர் சொன்ன போதனையில் நாட்டை நிர்வாகம் செய்யும் யுகத்தை ஏற்படுத்த தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தர்மத்திற்கு முன்னுரிமை வழங்கும் யுகத்தை எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். நாடு தற்போது அழிவுப்பாதையில் செல்கின்றது. இவை அனைத்தையும் சரியான பாதையில் கொண்டு செல்ல நாங்கள் எந்த அர்ப்பணிப்பையும் செய்யத் தயாராக இருக்கின்றோம். நாங்கள் நாட்டிடம் இருந்து எதனையும் எதிர்பார்க்கவில்லை. நாட்டிற்கு ஏதாவது செய்வதே எங்கள் நோக்கமாக உள்ளது.

# கணனி வலையமைப்பிற்குள் சமுர்த்தி வங்கிச் சங்கம்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் சமுர்த்தி வங்கிச் சங்கம் இவ்வாரம் முதல் கணனி வலையமைப்பிற்குள் உள்வாங்கப்படவுள்ளது. இது தொடர்பான வேலைத் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த வாரம் இது தொடர்பான பயிற்சியும் தெரிவு செய்யப்பட்ட அலுவலருக்கு கொழும்பில் வழங்கப்பட்டிருந்தது. இதன் மூலம் வங்கி நிதி நட வடிக்கைகளை சமுர்த்தி அதிகாரசபை உடனுக்குடன் கண்காணிப்பதுடன் வேலைத்திட்டங்களை இலகுபடுத்த முடியுமென தெரிவிக்கப்படுகின்றது. இந் நடைமுறை யாழ்.மாவட்ட தெரிவு செய்யப்பட்ட வங்கிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.(26)

# வடமாகாண சபையில் இருவருக்கு
# புதிய நியமனங்கள் வழங்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)


வடமாகாண சபையில் புதிய நியமனங்கள் ஆளுநரினால் வழங்கப்பட்டது.

.இந்நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை வடமாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநரின் கல்வி மற்றும் விளையாட்டுத் துறையின் ஆலோசகராக எதிர் [illegible]ரசிங்கம், வடமாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புத்

திணைக்கள ஆணையாளராக ரி.உமா ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஆளுநர் வழங்கி வைத்தார்.

இதன்போது ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகான கல்வி அமைச்சின் செயலாளர்.சி.சத்தியசீலன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்.ஆர்.வரதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# பேருந்துகளில் "இடப்பெயர்"கள் மும்மொழிகளிலும் அவசியம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் வழிப்பாதைக்குரிய இடங்கள் மும்மொழிகளிலும் குறிப்பிடப்படாமையால் வெளியூரிலிருந்து வந்து பிரயாணங்களை மேற்கொள்வோர் உரிய இடத்தின் பெயர் தெரியாது பேருந்துகளை தவறவிடும் சந்தர்ப்பங்கள் இடம்பெறுவதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இம்மாவட்டத்திலும் வவுனியாவிலும் மும்மொழியைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் பேருந்துகளில் மும்மொழிகளிலும் இடத்திற்குரிய பெயர் குறிப்பிடப்படுவதில்லை. அத்துடன் சில பேருந்துகளில் தமிழிலும் சில பேருந்துகளில் சிங்களத்திலும் தமிழிலும் குறிப்பிடப்படுகிறது. எனினும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆங்கில மொழியில் பெயா குறிப்பிடப்படாமையால் சக பயணிகளிடம் கேட்டு தமது பிரயாணங்களை மேற்கொள்கின்றனர்.

எனவே பயணிகளின் சிரமத்தை தடுக்க தனியார் பேருந்துகள் வழி இடத்திற்குரிய பெயரை மூன்று மொழிகளிலும் குறிப்பிடப்படல் வேண்டும். என மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (04)

# வடமாகாண ஆசிரியர் இடமாற்றம்; மேன்முறையீட்டிற்கான நிபந்தனைகள்

(நேற்றைய தொடர்ச்சி....)

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தமது இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு செய்வதற்கு வடமாகாண கல்வித் திணைக்களத்தால் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இதற்கமைய ஆளுநரினால் நியமிக்கப்பட்ட ஆசிரிய இடமாற்ற மீளாய்வுக் குழுவினால் தயாரிக்கப்பட்ட பட்டியல், ஏற்கனவே இடமாற்ற சபை மூலம் வெளியிடப்பட்ட பட்டியல் ஆகிய இரு பட்டியல்களிலும் பெயர் இடம்பெறும்பட்சத்தில் அவ் ஆசிரியர்களுக்கு இடமாற்றக்கடிதங்களை உடனடியாக வழங்குவதெனவும் இவர்களுள் "ஆசிரியர் இடமாற்றம் 2012 மார்கழி" இற்கான நிபந்தனைகளின் கீழ் மேன்முறையீடு செய்ய காரணம் இருப்பின் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடு செய்யலாம் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்கள் இலங்கை ஆசிரியர் சங்கம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை முஸ்லிம் ஆசிரியர் சங்கம் ஆகியன கூட்டாகத் தீர்மானித்து ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட 2012 மார்கழி ஆசிரிய இடமாற்றத்தின் போது பிரயோகிக்கப்படவுள்ள இடமாற்ற நிபந்தனைகளாக,

வருடாந்த இடமாற்ற முறையின் மூலம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு, வவுனியா வடக்குப் பிரதேசங்களில் இருந்து விரும்பப் படும் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெறுதல் தமது நியமனக்கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைச் சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்தவர்கள் தகுதியானவர்களாகக் கருதப்படுவர்.

எனினும் இதற்கு மேலதிகமாக,

a. தொண்டராசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் குறித்த பிரதேசத்தில் பத்து வருட சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்யப் பட்டிருப்பின் மட்டுமே இடமாற்றம் பெறுவர்.

b. குறித்த வலயத்தில் விரும்பப்படும் பாடசாலைகளில் மட்டும் சேவை செய்திருப்பின் 06 வருட சேவையைப் பூரணமாக முடித்திருப் பின் இடமாற்றம் பெறுவர்.

c. போக்குவரத்து வசதி குறைந்த பாட சாலையில் 04 வருட சேவையையும் வரும்பப் படும் பாடசாலையில் 01 வருட சேவையுமாக மொத்தம் 05 வருட சேவை பூரணமாக முடித் திருப்பினும் இடமாற்றம் பெறுவர்.

மேன்முறையீடுகள்.

3.தமது சொந்த மருத்துவக் காரணங்களுக்காக இடமாற்றம் பெற விரும்புபவர்கள் இது தொடர்பான மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்க முடியும். இம்மேன்முறையீடு கல்வியமைச்சினால் குறித்துரைக்கப்படும் மருத்துவ சபையினால் (Medical Board) பரிசீலிக்கப்பட்டு அவர்களது சேவை தொடர்பில் முடிவுகள் மேற்கொள்ளப் படும்.

4. போரின் காரணமாக வெளிப்படையாக தெரியும் வகையில் ஊனமுற்றவர்கள், உயிரிழப்புக்கள் தொடர்பில் மேன்முறையீடு செய்வதன் மூலம் இடமாற்ற கோரிக்கை சாதகமாக பரிசீலனை செய்யப்படலாம்.

5. மத குருமார்களான ஆசிரியர்களின் மேன்முறையீடுகள் அவர்களது சமய பாரம்பரியங்கள் காரணமாக முன்வைக்கப்படின் அவை இடமாற்ற சபையினால் சாதகமாகப் பரிசீலிக் கப்படலாம்.

6. துணைவர் சேவைக்காலத்தினை பூர்த்தி செய்வதனை ஒப்புக்கொண்டால் அவர் அது தொடர்பான ஒப்பந்தத்தை வலயக் கல்விப் பணிப்பாளருடன் மேற்கொண்டு, தமது சேவைக் காலத்திற்கு மேலதிகமாக அதே வலயத்தில் சேவையாற்றுதல் வேண்டும். (முற்றும்)

# 2013 புத்தாண்டுப் பலன்கள்



## கும்பம்

அமைச்சராக இருந்தாலும் ஆண்டவனாக இருந்தாலும் தவறை தட்டிக் கேட்பவர்களே! உங்கள் ராசிக்கு 6ஆவது ராசியில் இந்தாண்டு பிறப்பதால் எதிரிகளை வீழ்த்தும் வல்லமை உண்டாகும். கணவன் - மனைவிக்குள் பாசம் அதிகரிக்கும். சுபநிகழ்வுகளால் வீடு களை கட்டும். வற்றிய பணப்பை நிரம்பும். விலகிச் சென்ற பழைய சொந்த பந்தங்கள் இனி தேடி வருவார்கள். நண்பர்களின் ஒத்துழைப்பும் உண்டு.

வருடம் தொடங்கும்போது செவ்வாய் 12ஆம் வீட்டில் நிற்பதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும். சகோதர, சகோதரிகளால் அவ்வப்போது அலைச்சலும் டென்ஷனும் இருக்கும். என்றாலும் அவர்களால் ஆதாயமும் உண்டு. வருடம் முடியும் வரை உங்கள் ராசி நாதனான சனிபகவான் 9ஆம் வீட்டில் உச்சம் பெற்று வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் சாதிக்க வேண்டுமென்ற தன்னம்பிக்கை வரும். குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள். பாதியிலேயே நின்றுபோன வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். பணவரவு உண்டு என்றாலும் சேமிக்க முடியாதபடி செலவுகளும் இருக்கும். மகளின் கல்யாணத்தை நடத்துவீர்கள். மகனுக்கு வெளிநாடு தொடர்புடைய உயர்கல்வி. உத்தியோகம் அமையும்.

வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள். புதுவேலை அமையும். ஆனால், தந்தைக்கு நெஞ்சுவலி, அலைச்சல், டென்ஷன் வந்துபோகும். வருடம் பிறக்கும்போது 3ஆம்-வீட்டில் கேது நிற்பதால் திடீர் பணவரவு உண்டு.. சகோதரர் பக்கபலமாக இருப்பார். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். தாயாருடன் இருந்து வந்த கருத்து மோதல் நீங்கும். அவரின் உடல்நிலை சீராகும்.

எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும். பிரபலங்கள், தொழிலதிபர்களின் நட்பு கிட்டும். அவர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்ளும் அளவிற்கு நெருக்கமாவீர்கள். 9ஆம் வீட்டில் ராகு அமர்ந்திருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். கோயிலுக்கு குடும்பத்துடன்போய் நேர்த்திக் கடனை முடிப்பீர்கள். பழைய வாகனத்தை மாற்றுவீர்கள். அரசாங்க அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். தந்தையாருடன் மனஸ்தாபங்கள், அவருக்கு சிறுசிறு சிகிச்சைகள் வந்து போகும்.

மே 28ஆம் திகதி வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் இனம்புரியாத கவலைகள் வந்துபோகும். தாயாருடன் மனஸ்தாபங்கள் வெடிக்கும். அவருக்கு கை, கால் வலி, சளித் தொந்தரவு வந்து நீங்கும். வரவேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் விரிசல்கள் வரக் கூடும். புதியவர்களை நம்பி பழைய நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். அடுத்தவர்கள் விவகாரங்களில் தலையிடுவதால் வீண் பழிக்கு ஆளாவீர்கள். ஆனால் மே 29ஆம் திகதி முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் நுழைவதால் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேர்வீர்கள்.

வறண்டிருந்த பணப்பை கொஞ்சம் நிரம்ப ஆரம்பிக்கும். குழந்தை பாக்கியம் உண்டு. பிள்ளைகளால் மதிப்பு, மரியாதை கூடும். மகளுக்கு ஏதோ ஒரு வகையில் தடைபட்டுக் கொண்டிருந்த திருமணம் இப்பொழுது கூடிவரும். மகன் குடும்ப சூழ்நிலையறிந்து பொறுப்பாக நடந்து கொள்வார். வாடகை வீட்டிலிருந்த சிலர் சொந்த வீட்டிற்கு குடி புகுவீர்கள். சகோதரர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வெளிநாட்டினரால் திடீர் திருப்பங்கள் ஏற்படும். அடிக்கடி தொந்தரவு தந்த வாகனம் இனி சீராக ஓடும்.

கன்னிப் பெண்களே! நல்லவர்களைப்போல் சிலர் நடித்து ஏமாற்ற முயற்சி செய்வார்கள். காதல் கைகூடும். திருமணம் கொஞ்சம் தாமதமாகி முடியும். விடுபட்ட பாடத்தை முடித்து உங்கள் தகுதிக்கேற்ப நல்ல வேலையில் சேருவீர்கள்.

மாணவர்களே! தேர்வில் வெற்றியுண்டு என்று தப்புக் கணக்கு போடாமல், சதா படித்து, எழுதிப் பார்ப்பது நல்லது. அயல்நாடு சென்று படிக்கும் வாய்ப்பும் தேடி வரும். உயர் கல்வியில் வெற்றியுண்டு.

அரசியல்வாதிகளே! அதிகாரிகளே! உங்களின் நடவடிக்கைகளை தலைமை உற்று நோக்கும். உட்பூசல்களில் தள்ளியே இருங்கள்.

வியாபாரிகளே! வானொலி விளம்பரம், தொலைக்காட்சி விளம்பரங்களால் வியாபாரத்தை பெருக்குவீர்கள். கொடுக்கல்-வாங்கலில் சுமுகமான நிலை காணப்படும். மற்றவர்களின் ஆலோசனையை ஒதுக்கித் தள்ளுங்கள். உங்கள் அனுபவ அறிவை பயன்படுத்துங்கள். மெடிக்கல், எலெக்ட்ரோனிக்ஸ், பெட்ரோ கெமிக்கல் வகைகளால் ஆதாயம் உண்டு. பழைய பங்குதாரரை மாற்றுவீர்கள். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள்.

கலைஞர்களே! உங்களுக்கு வாய்ப்பு தருவதாக சில நிறுவனங்கள் இழுத்தடிக்கும். வீண் புகார்களும் வரும்.

விவசாயிகளே! பக்கத்து நிலத்துக்காரரை அனுசரித்துப் போங்கள். கடனுதவி கிடைக்கும். நெல், காய்கறிகளால் நல்ல லாபமடைவீர்கள். அலைச்சலும் பணப் பற்றாக்குறையும் முற்பகுதியில் இருந்தாலும் மையப்பகுதி முதல் திடீர் திருப்பங்கள் தரும் வருடமாகும்.

(தொடரும்...)

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

**இரசாயனவியல்**

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

ஒட்சியேற்றல் தாழ்த்தல்

ஆரம்பநிலையில் ஒட்சியேற்றல் என்பது ஒட்சிசன் சேர்த்தல் அல்லது ஐதரசன் அகற்றப்படுதல் என்றும் தாழ்த்தல் ஐதரசன் சேர்த்தல் அல்லது ஒட்சிசன் அகற்றப்படுதல் என்றும் வரையறுக்கப்பட்டது. இவ்விரு தாக்கங்களும் ஒன்றுக்கொன்று நிறைவாக்கும் தாக்கங்களாகும். அநேகமாக ஒன்று நிகழ்ந்தால் மற்றதும் அத் தாக்கத்தில் நிகழும்.

உ-ம் :

ஒட்சியேற்றல்

$$2H_2 + O_2 = 2H_2O$$

தாழ்த்தல்

ஒட்சியேற்றல்

$$H_2 + CuO = Cu + H_2O$$

தாழ்த்தல்

ஒட்சியேற்றல்

$$H_2S + Cl_2 = 2HCl + S$$

தாழ்த்தல்

இவ்வுதாரணங்களில் ஒட்சியேற்றல் நிகழ்வதற்கு காரணமாய் அமைந்த பதார்த்தங்கள் ஒட்சியேற்றும் கருவிகள் என்றும் தாழ்த்தலுக்கு காரணமாக விளங்கும் பதார்த்தங்கள் தாழ்த்தும் கருவிகள் என்றும் வழங்கப்படும்.

மேலே $O_2$, CuO, $Cl_2$ ஒட்சியேற்றும் கருவிகள்
$H_2$, $H_2S$ தாழ்த்தும் கருவிகள்

பின்னர் இவ்வரைவிலக்கணம் விஸ்தரிக்கப்பட்டு எதிர் மின்னியல்புள்ள மூலகங்கள் சேர்தல் அல்லது நேர் மின்னியல்புள்ள மூலகங்கள் அகற்றப்படுதல் ஒட்சியேற்றல் என்றும் இதற்கு மாறானது தாழ்த்தல் என்றும் விபரிக்கப் பட்டது.

உ-ம் :

ஒட்சியேற்றல்

$$2Fe + 3Cl_2 \longrightarrow 2FeCl_3$$

தாழ்த்தல்

இப்பொழுது அயன் சேர்வைகள் பங்குபற்றும் தாக்கங்களுக்கு இக்கருத்துக்கள் பின்வருமாறு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

***ஒட்சியேற்றல் என்பது இலத்திரன்களை இழத்தல். தாழ்த்தல் என்பது இலத்திரனைப் பெறுதல்***

உ-ம் :

ஒட்சியேற்றல்

$$H_2S + 2FeCl_3 = S + 2FeCl_2 + 2HCl$$

தாழ்த்தல்

இத்தாக்கத்தை அயன் சமன்பாடாக எழுதுவோம்.

$H_2S + 2Fe^{3+} + 6Cl^- \rightarrow S + 2Fe^{2+} + 4Cl^- + 2H^+ + 2Cl^-$ குளோரைட்டு அயன்கள் தாக்கத்தின் முன்னும் பின்னும் மாற்றமடையவில்லை. ஆகவே அவற்றைவிட்டு, நிகழ்ந்த மாற்றத்தை சுருக்கமாக எழுதுவோம்.

$$H_2S + 2Fe^{3+} \longrightarrow S + 2Fe^{2+} + 2H^+$$

இங்கே பெரிக்கு அயன்கள் இலத்திரன்களைப் பெற்று பெரசு அயன்களாக மாற்றம் அடைந்திருக்கின்றன (தாழ்த்தல்), ஐதரசன் சல்பைட்டு இலத்திரன்களை இழந்து கந்தகமாகவும், ஐதரசன் அயன்களாகவும் மாற்றம் அடைந்திருக்கின்றன (ஒட்சியேற்றல்), நிகழ்ந்த மாற்றங்களைக் காட்டும் சமன்பாடுகளை இரு படிகளில் எழுதலாம்.

$2Fe^{3-} + 2e \longrightarrow 2Fe^{2+}$ தாழ்த்தல்
$H_2S \longrightarrow S + 2H^+ + 2e$ ஒட்சியேற்றல்

கூட்டலியல் $H_2S + 2Fe^{3+} \rightarrow S + 2Fe^{2+} + 2H^+$

குறிப்பு: (1) ஒட்சியேற்றலின்போது ஒட்சியேற்ற எண் அதிகரிக்கும். $H_2S$ இல் கந்தக அணுவின் ஒட்சியேற்ற எண் - 2 ஆகும். கந்தக மூலகத்தில் கந்தக அணுவின் ஒட்சியேற்ற எண் 0 ஆகும்.

தாழ்த்தலின்போது ஒட்சியேற்ற எண் குறையும் பெரிக்கு அயன்களில் இரும்பின் ஒட்சியேற்ற நிலை +3, பெரசு அயன்களின் இரும்பின் ஒட்சியேற்ற நிலை +2 ஆகும்.

பரகாந்தவியல்பும் அபரகாந்தவியல்பும்

இரும்பு கோபால்ற் நிக்கல் போன்ற சில திண்மங்கள் காந்தங்களால் நன்றாகக் கவரப்படுகின்றன. இவற்றிற்கு இரும்புக் காந்தவியல்பு உண்டு என்போம். சில பதார்த்தங்கள் காந்தப்புலத்தினால் மென்மையாகக் கவரப்படுகின்றன. (உ-ம் : ஒட்சிசன் வாயு, செப்பு சல்பேற்று)) இவை பரகாந்தவியல்பு உடைய பதார்த்தங்கள் எனப்படும். சில பதார்த்தங்கள் காந்தப் புலன்களினால் மென்மையாகத் தள்ளப்படுகின்றன. இவை அபரகாந்தவியல்புடைய பதார்த்தங்கள் எனப்படும். (உ-ம் : NaCl)

இவ்விதமான காந்தவியல்புகளுக்கு அணுவில் உள்ள இலத்திரன்களே காரணம். எதிர் ஏற்றம் உள்ள இலத்திரன்கள் தமது அச்சுக்களில் சுழல்வதால் (Spin) காந்தப்புலன்கள் உண்டாகின்றன. ஒரே ஒழுக்கில் இருக்கும் இரண்டு இலத்திரன்களும் எதிர்த்திசைகளில் சுழற்சியை உடையவையாய் இருப்பதனால் எதிர் விளைவுகளை ஏற்படுத்தி மொத்த காந்தத் திருப்பத்தை பூச்சியமாக்கும்.

ஓர் அணு அல்லது அயனில் ஒற்றை எண்ணிக்கையான இலத்திரன்கள் இருந்தால் அவை பரகாந்தவியல்புடையவையாக இருக்கும். சில அணுக்களில் இரட்டை எண்ணிக்கையான இலத்திரன்கள் இருந்தாலும் நிரப்பப்படாத உப சக்தி மட்டம் ஒன்று இருக்குமானால் பரகாந்தவியல்பு அவதானிக்கப்படுகிறது. ஓர் அணுவில் உள்ள எல்லா இலத்திரன்களும் சோடிகளாக இருப்பின் அவை பரகாந்தவியல்பைக் காட்டா, அபரகாந்தவியல்புக்கும் இலத்திரனின் சுழற்சிக்கும் எவ்வித தொடர்புமில்லை. இது இலத்திரன்களின் சுழற்சிக்கும் எவ்வித தொடர்புமில்லை. இது இலத்திரன்களில் உள்ள ஏற்றத்தினால் ஏற்படுவதாகும். அபரகாந்தவியல்பு எல்லாப் பதார்த்தங்களிலும் காணப்படுவதாகவும், ஆனால் பரகாந்தவியல்பு தோன்றும் பதார்த்தங்களில் அது மறைக்கப்படுகிறது என்று கருதப்படுகிறது.

S தொகுப்பு மூலகங்கள்
பெயருக்கான காரணமும் இலத்திரன் நிலையமைப்பும்

முதலாம் தொகுதி மூலகங்களும் இரண்டாம் தொகுதி மூலகங்களும் S தொகுப்பு மூலகங்களுள் அடங்கும். இவற்றை முறையே கூட்டம் IA, IIA என்றும் அழைப்பர். இவற்றை S தொகுப்பு மூலகங்கள் என்று அழைப்பதன் காரணம் இம்மூலகங்களின் அணுக்களின் மிக உயர்ந்த (வெளி) உபசக்தி மட்டமாக ஒரு S உபசக்தி மட்டம் அமைந்து அதில் இலத்திரன்கள் காணப்படுவதாகும். ஈறு S உபசக்தி மட்டத்தில் ஒரு இலத்திரன் காணப்பட்டால் அது I ஆம் தொகுதி மூலகமாகும். 2 இலத்திரன்கள் காணப்பட்டால் அது II ஆம் தொகுதி மூலகமாகும்.

## I ஆம் தொகுதி மூலகங்களின் இலத்திரன் நிலையமைப்பு

| மூலகம் | | அணு எண் | இலத்திரன் ஒழுங்கு | இலத்திரன் நிலையமைப்பு |
|---|---|---|---|---|
| இலித்தியம் | Li | 3 | 2, 1 | [He], $2S^1$ |
| சோடியம் | Na | 11 | 2, 8, 1 | [Ne], $3S^1$ |
| பொற்றாசியம் | K | 19 | 2, 8, 8, 1 | [Ar], $4S^1$ |
| உருபீடியம் | Rb | 37 | 2, 8, 18, 8, 1 | [Kr], $5S^1$ |
| சீசியம் | Cs | 55 | 2, 8, 18, 18, 1 | [Xe], $6S^1$ |
| பிரான்சியம் | Fr | 87 | 2, 8, 18, 32, 18, 8, 1 | [Rn], $7S^1$ |

## II ஆம் தொகுதி மூலகங்களின் இலத்திரன் நிலையமைப்பு

| மூலகம் | | அணு எண் | இலத்திரன் ஒழுங்கு | இலத்திரன் நிலையமைப்பு |
|---|---|---|---|---|
| பெரிலியம் | Be | 4 | 2, 2 | [He] $2S^2$ |
| மக்னீசியம் | Mg | 12 | 2, 8, 2 | [Ne], $3S^2$ |
| கல்சியம் | Ca | 20 | 2, 8, 8, 2 | [Ar], $4S^2$ |
| துரந்தியம் | St | 38 | 2, 8, 18, 8, 2 | [Kr], $5S^2$ |
| பேரியம் | Ba | 56 | 2, 8, 18, 18, 8, 2 | [Xe], $6S^2$ |
| றேடியம் | Ra | 88 | 2, 8, 18, 32. 18. 8, 2 | [Rn], $7S^2$ |

## முதலாம் இரண்டாம் தொகுதி மூலகங்களின் அயனாக்கற் சக்திகள்

இம் மூலகங்களின் முதலாம் அயனாக்கற் சக்திகள் நேரானவை அதாவது அயனாகும்போது சக்தி உறிஞ்சப்படும். முதலாம் அயனாக்கற் சக்தி என்பது ஒரு இலத்திரனை ஒரு அணுவில் இருந்து நீக்குவதற்கு கொடுக்கப்படவேண்டிய சக்தியாகும். பொதுவாக ஒரு மூல் சம்பந்தப்பட்ட சக்தியே குறிப்பிடப்படுவது வழக்கம்.

$M(g) \quad M^{+}(g) + e^{-}; \ \triangle H$ = அயனாக்கற் சக்தி (1 மூல்)

அடுத்தடுத்து ஒழுங்காக இலத்திரன்களை அகற்றுவதற்குத் தேவையான சக்தி 2 ஆம், 3 ஆம் அயனாக்கற்சக்திகள் என்று வழங்கப்படும்.

இவ்விரு தொகுதிகளிலும் மேல் இருந்து கீழேவர அயனாக்கற்சக்திகள் குறைந்து கொண்டு போவதை அட்டவணை காட்டுகிறது. மேலும் 1 ஆம் தொகுதி மூலகங்களின் அயனாக்கற் சக்தியிலும் பார்க்க அதே ஆவர்த்தனத்தில் உள்ள 2 ஆம் தொகுதி மூலகங்களின் அயனாக்கற் சக்தி கூடுதலாகவும் இருப்பதை அவதானிக்கலாம். ஒரு தொகுதியில் மேல் இருந்து கீழேவர அயனாக்கற் சக்தி குறைவதற்கான காரணம் இவ்வொழுங்கில் அணு ஆரைகள் அதிகரிப்பதாகும். எவ்வளவிற்கு அகற்றப்படும் இலத்திரன், கருவில் இருந்து தொலைவில் இருக்கின்றதோ அவ்வளவிற்கு கருவால் கவரப்படும் தன்மை குறைகிறது. இதே ஒழுங்கில் கரு ஏற்றம் அதிகரிப்பது உண்மையே ஆயினும் அதனால் ஏற்படுத்தக்கூடிய அதிகரித்த கவர்ச்சி விசையை ஈற்றொழுக்குக்கும் கருவிற்கும் இடையில் அதிகரித்து வரும் இலத்திரன்களின் மறைப்பு விளைவு (திரை விளைவு) ஈடு செய்துவிடும். ஒரு ஆவர்த்தனத்தில் முதலாம் தொகுதியிலும் பார்க்க இரண்டாம் தொகுதி அயனாக்கற் சக்தி அதிகரிப்பதற்கான காரணம் அணுவின் பருமன் இரண்டாம் தொகுதியில் குறைவாகவிருப்பதனால் ஏற்படக்கூடிய விளைவாகும். அகற்றப்படும் இலத்திரன் கருவிற்கு அண்மையாக காணப்படுவதால், அகற்றப்படும் இலத்திரன் கருவிக்கு அண்மையாக காணப்படுவதால் இதை அகற்ற, கூடிய அயனாக்கற்சக்தி தேவை. கரு ஏற்றம் 1 ஆம் தொகுதியிலும் 2 ஆம் தொகுதியிலும் அதிகரிக்கின்றமையும் அயனாக்கற் சக்தி அதிகரிப்பதற்கு ஒரு காரணமாகும்.

| மூலகம் | அணு எண் | அணு ஆரை Å | முதலாம் அயனாக்கற்சக்தி (KJ mol^-1) | | அயனாரை Å |
|---|---|---|---|---|---|
| Li | 3 | 1·23 | 520 | | 0·60 |
| Na | 11 | 1·57 | 496 | | 0·95 |
| K | 19 | 2·03 | 419 | | 1·33 |
| Rb | 37 | 2·16 | 403 | | 1·48 |
| Cs | 55 | 2·35 | 376 | | 1·69 |
| Be | 4 | 0·89 | 899 | (2657*) | 0·31 |
| Mg | 12 | 1·36 | 738 | (2187) | 0·65 |
| Ca | 20 | 1·74 | 590 | (1735) | 0·99 |
| Sr | 38 | 1·91 | 549 | (1613) | 1·13 |
| Ba | 56 | 1·98 | 502 | (1467) | 1·35 |

குறிப்பு:- Be - Ba 1 ஆம், 2 ஆம் அயனாக்கற்சக்திகளின் கூட்டுத்தொகை

## அயனாக்கற்சக்தியும் தொழிற்படும்

ஒப்பீட்டளவில் முதலாம் இரண்டாம் தொகுதி மூலகங்களின் அயனாக்கற்சக்திகள் இம் மூலகங்கள் உள்ள ஆவர்த்தனங்களில் மற்ற மூலகங்களின் அயனாக்கற் சக்திகளிலும் குறைவானவையாகும். இதனால் இம் மூலகங்கள் அதிக தொழிற்பாடு (தாக்கவீதம்) உடையவையாகும். இவை குறைந்தளவு சக்தியைப் பெற்று இலகுவில் பின்வருவனபோன்ற தாக்கங்களில் ஈடுபடும்.

M (உலோகம்) $M^{+}(g) + e^{-}$ முதலாம் தொகுதி
M (உலோகம்) $M^{2+}(g) + 2e^{-}$ இரண்டாம் தொகுதி

S தொகுதி மூலகங்களில் முதலாம் தொகுதி மூலகங்கள், இரண்டாம் தொகுதி மூலகங்களிலும் தொழிற்பாடு கூடியவை. முதலாம் தொகுதி மூலகங்களின் தொழிற்பாடு அதிகமாக இருப்பதற்கு அவற்றின் அயனாக்கற்சக்திகள் குறைவானவை என்பதும் அவை தாக்கத்தில் ஈடுபட இழக்கவேண்டியிருப்பது ஒரு இலத்திரன் மட்டுமே என்பதும் சாதகமான இரண்டு அம்சங்களாகும்.

இவ்விரு தொகுதிகளிலும் மேலே உள்ள மூலகங்களாகிய இலிதியமும், பெரிலியமும் ஒப்பீட்டளவில் தொழிற்பாடு குறைந்து காணப்படுவதற்கு அவற்றின் உயர் அனயாக்கற்சக்தியை காரணமாகக் கூறலாம். இவையும் இவற்றுடன் சில சமயங்களில் மக்னீசியமும் பங்கீட்டு வலுச் சேர்வைகளை உருவாக்குவதற்கும் இது காரணமாகும். எவ்வாறாயினும் பெருவாரியான முதலாம் தொகுதி, இரண்டாம் தொகுதி மூலகங்களின் திண்மச் சேர்வைகள் எல்லாம் அயன் சேர்வைகள் ஆகும்.

## இம் மூலகங்களின் பௌதிகவியல்புகள்

முதலாம் தொகுதி மூலகங்களை கார உலோகங்கள் என்றும் இரண்டாம் தொகுதி மூலகங்களை காரமண் உலோகங்கள் என்றும் அழைப்பர். இம்மூலகங்களின் ஐதரொட்சைட்டுகள் காரணங்களாக இருப்பதே இதற்கான காரணமாகும்.

இம் மூலகங்கள் உலோகங்கள் ஆகும். வெள்ளிபோன்ற பளபளப்பும், மின் வெப்பம் ஆகியவற்றின் உயர் கடத்துதிறனும் உடைய மூலகங்கள் உலோகங்கள் என்று அழைக்கப்படும். இவற்றிற்கு இவ்வியல்புகள் உண்டு. ஆனால் S தொகுப்பில் உள்ள உலோகங்கள் மெதுமையானவையாகவும் தாழ்ந்த உருகுநிலை, கொதிநிலை உடையவையாகவும் காணப்படும். கீழே தரப்படும் அட்டவணையில் அவதானித்தால் முதலாம் தொகுதி உலோகங்களிலும் இரண்டாம் தொகுதி மூலகங்கள் அடர்த்தி, வன்மை, உருகுநிலை, கொதி நிலை, ஆவியாதல் மறை வெப்பம் ஆகியவை கூடியவையாக காணப்படுகின்றன.

| மூலகம் | அடர்த்தி g cm^-3 | உருகு நிலை °C | கொதி நிலை °C | ஆவியாதல் மறைவெப்பம் K. J. mol^-1 | வன்மை (ஒப்பீட்டளவில்) |
|---|---|---|---|---|---|
| Li | 0·535 | 179·1 | 1340° | 152·5 | 0·06 |
| Na | 0·971 | 97·5 | 885 | 108·6 | 0·07 |
| K | 0·862 | 63·5 | 775 | 90·0 | 0·04 |
| Rb | 1·532 | 39·0 | 690 | 85·8 | 0·03 |
| Cs | 1·90 | 28·5 | 670 | 78·8 | 0·02 |
| Be | 1·86 | 1280 | 2970 | 326 | — |
| Mg | 1·75 | 650 | 1100 | 149 | 30—40 |
| Ca | 1·55 | 850 | 1490 | 177 | 23 |
| Sr | 2·6 | 760 | 1380 | 164 | 20 |
| Ba | 3·59 | 710 | 1640 | 178 | — |

இம் மூலகங்கள் எல்லாம் மென்றகடாகவும், கம்பிகளாகவும் இழுபடக்கூடியவையாகவும் காணப்படுகின்றன.

## இம் மூலகங்களின் பௌதிகவியல்புகளை விளக்குதல்

மேற்கூறிய இயல்புகளை இம் மூலகங்களின் உலோக அமைப்பைக் கொண்டு விளக்கலாம். உலோகப் பளிங்குகளின் சாலகத்தில் சாலகப்புள்ளிகளில் $M^{+}$ (முதலாம் தொகுதி உலோகமாயின்), $M^{++}$ (இரண்டாம் தொகுதி உலோகமாயின்) அயன்கள் காணப்படும். இவ்வயன்கள் வலுவளவு இலத்திரன்கள் (இறுதி உபசக்திமட்ட இலத்திரன்கள்) உருவாக்கும் இலத்திரன் கடலில் காணப்படும். இவ்விலத்திரன்கள் சாலகத்தின் கண்ணறைகளில் சுயாதீனமாக இலகுவில் அசைந்து சாலகத்தின் எல்லாப் பகுதிகளையும் அடையக்கூடியவையாகும்.

**கடத்துதிறனை விளக்கல் :**
சுயாதீனமாக அசையக்கூடிய இலத்திரன்கள் மின்னைக் கடத்தவும் உதவும். இதே இலத்திரன்கள் தாம் பெற்ற வெப்ப சக்தியை ஒரு பகுதியில் இருந்து பிறிதொரு பகுதிக்கு எடுத்துச் செல்லவும் உதவும். ஆகவே இவ்வுலோகங்கள் இலகுவில் மின்னையும் வெப்பத்தையும் கடத்தும்.

## உலோகப் பளபளப்பை விளக்குதல்

ஒளிச் சக்தி அலைகள் உலோக மேற்பரப்பை தாக்கும்போது இவ்வலைகளுடன் இணைந்த மின்புலங்கள் இலத்திரன்களில் அதிர்வலைவுகளைத் தூண்டும். இதன் விளைவாக மின்காந்த கதிர்ப்பு ஒளி அலைகளாக வெளிவிடப்படும். இதுவே உலோகப் பளபளப்புக்கு காரணமாகும்.

மெதுமை, மென்றகடாக்கல், கம்பிகளாக இழுத்தல் ஆகியவியல்புகளை விளக்குதல்:

உதாரணத்திற்கு சோடியத்தை எடுத்துக்கொள்ளுவோம் சோடியம் அயன்களால் ஆன சாலத்தை கட்டுக்குலையாமல் வைத்திருப்பது $Na^{+}$ அயன்களுக்கும் வலுவளவு இலத்திரன் முகில்களுக்கும் இடையில் உள்ள கவர்ச்சி விசை ஆகும். இக்கவர்ச்சியானது திசைப்படுத்தப்படாதது, எல்லாத் திசைகளிலும் சீராகவிருப்பது, இதனால் சோடியத்திற்கென பிரத்தியேகமான, அனுகூலமான நிலையொன்று இல்லை. ஆகவே $Na^{+}$ அயன் ஒரு சாலகப் புள்ளியில் இருந்து (Lattice Site) வேறு ஒரு சாலகப் புள்ளிக்கு இலகுவில் நகர்த்தப்படலாம். சிறிய அளவு சக்தியைப் பிரயோகித்து அடித்து தகடாக்குதல் என்பது, வெவ்வேறு சாலகப் புள்ளிகளுக்கு உலோக அயன்களுக்கிடையில் வன்மையான திசை கொண்ட பிணைப்புகள் யாதும் இல்லாமல் இருப்பதால் இலகுவில் கத்தியால் வெட்டக்கூடிய உலோகங்களாகக் காணப்படுகின்றன. இதே காரணத்தினால்தான் இம்மூலகங்கள் தாழ்ந்த உருகுநிலையும் கொதிநிலையும் கொண்டவையாகவும் காணப்படுகின்றன.

ஆனால் மேலே கூறப்பட்ட இயல்புகளில் இரண்டாம் தொகுதி மூலகங்கள் வன்மை கூடியவையாகவும், உயர் உருகு நிலை, உயர் கொதி நிலை கூடியவையாகவும் காணப்படுகின்றன. இதையும் உலோகப் பிணைப்புக் கொள்கை (Theory) மூலம் விளக்கலாம். இக்கொள்கையின் படி ஒரு பிணைப்பின் வலு.

## பிணைப்புக்காக விடுவிக்கப்படும் இலத்திரன்களின் எண்ணிக்கை அணுவின் பருமன்

என்ற விகிதத்தில் தங்கியுள்ளது.

இவ்விகிதம் பெரிதாகவிருந்தால் உலோக அணுக்களுக்கிடையில் பிணைப்புக்களின் வன்மையும் அதிகமாகும். ஒரு பிணைப்பு இலத்திரனையும் பெரிய அணுக்களையும் கொண்ட முதலாம் தொகுதி மூலகங்களின் இப்பிணைப்புகள் வலுவற்றதாகக் காணப்படுகின்றன. இரண்டாம் தொகுதியில்

இரண்டு பிணைப்பு இலத்திரன்களும் முதலாம் தொகுதியிலும் சிறிய அணுக்களையும் கொண்டவை ஆகவே இவற்றின் அணுக்களுக்கிடையில் உள்ள பிணைப்பின் வலு அதிகமாகும். இதனால் மேற்கூறியவியல்புகள் 2 ஆம் தொகுதியில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

1 ஆம் தொகுதியில் வன்மை, உருகுநிலை, கொதிநிலை ஆகியவை மேல் இருந்து கீழே வர படிமுறையில் குறைகின்றது. இவ்வொழுக்கில் அணுக்களின் பருமன் அதிகரிப்பதால் உலோகப் பிணைப்பின் வலு குறைகின்றது. இதனால் மேற்கூறிய கோலம் உண்டாகின்றது. 2 ஆம் தொகுதியில் இவ்விதமாக ஒழுங்கான மாற்றம் இல்லை. பெரிலியமும், மக்னீசியமும் சிறிய அணுக்களாக இருப்பதால் வன்மைகூடிய உலோகங்களாகும். மேலும் அடர்த்தி குறைந்த மூலகங்களாக இருப்பதனாலும் இவை தொழிற்துறைகளினால் கட்டமைப்புக்குரிய உலோகமாக உபயோகப்படுகிறது.

## S தொகுப்பு மூலகங்கள் நீருடன் தாக்கம்

அநேகமான உலோகங்கள் நீருடன் தாக்கமுறும். இத்தாக்கத்தின் போது $M^{+}$ (தொகுதி I) $M^{2+}$ (தொகுதி II) அயன்கள் பின்வருமாறு உருவாகின்றன.

தொகுதி I

பொதுத்தாக்கம்

$$2M + 2H_2O \quad 2M^{+} + 2OH^{-} + H_2\uparrow$$

உதாரணம் : $2Na + 2H^{2}O \quad \underbrace{2Na^{+} + 2OH^{-}}_{2\,NaOH} + H_2\uparrow$

சிறிய சோடியம் துண்டொன்றை நீரில் போட்டு அவதானித்தால் அது 'இஸ்' என்ற சத்தத்துடன் அங்குமிங்கும் ஓடித் திரிந்து உருகிக் கோளமாகி நீரில் கரைவதையும் வாயுக்குமிழ்கள் உருவாகுவதையும் காணலாம். இயக்கம் தடைப்பட்டால் வெளிவரும் ஐதரசன் தாக்க வெப்பத்தினால் எரியூட்டப்பட்டு வெடித்து எரிவதையும் மஞ்சள் நிறச் சுவாலை உண்டாவதையும் காணலாம்.

குளிர் நீருடன் எல்லா உலோகங்களும் தாக்கத்தில் ஈடுபடும். தொழிற்பாடு Li, Na,K, Rb, Cs என்ற ஒழுங்கில் அதிகரிக்கும். உண்டாகும் உலோக ஐதரொட்சைட்டுகள் நீரில் கரையும் இவைகள் எல்லாம் மூலகங்கள் ஆகும். மேற்கூறிய ஒழுங்கில் இம்மூலகங்களின் மூலவியல்பு அதிகரிக்கும்.

**பொதுத் தாக்கம்**

$$M + 2H_2O \rightarrow M^{2+}(aq) + 2OH^{-} + H_2\uparrow$$

**உதாரணம் :** $Ca + 2H_2O = \underbrace{Ca^{2+} + 2OH^{-}}_{Ca(OH)_2} + H_2\uparrow$

1. Be பெரிலியம் : பெரிலியம் குளிர் நீருடன் தாக்கமுறுவதில்லை. செஞ்சூட்டிற் தன்னும் நீராவியைத் தானும் பிரிகையுறச் செய்யாது.

2. Mg மக்னீசியம் :- குளிர் நீருடன் மிக மந்தமாகவே தாக்கத்தில் ஈடுபடும். துலக்கப்பட்ட மக்னீசியம் நாடாவை குளிர் நீருக்குள் போட்டால் ஐதரசன் வாயுக்குமிழ்கள் உண்டாவதை அவதானிக்க முடியாது. ஆனால் துளி பினோல்தலீன் கரைசலை விட்டால் மக்னீசியம் நாடாவைச் சுற்றி இளம் சிவப்பு நிறம் உண்டாகும். இதனால் தாக்கம் நிகழ்ந்திருக்கிறது என அறிகிறோம். $Mg(OH)_2$ கரைசல் காரவியல்பின் காரணமாக பினோத்தலின் நிறம் மாறியிருக்கிறது. கொதி நீருடன் தாக்கவீதம் அதிகரிக்கும். நீராவியுடன் வீறாகத் தாக்கம் புரியும்.

$$Mg + \underset{\text{நீராவி}}{H_2O} \longrightarrow MgO + H_2\uparrow$$

கல்சியம் Ca, துரந்தியம் Sr, பேரியம் Ba ஆகிய மூலகங்கள் குளிர் நீருடன் தாக்கமுற்று ஐதரசனை விடுவிக்கும். இம் மூலகங்களின் ஐதரொட்சைட்டுக்களின் தாக்கவீதம் தரப்பட்ட ஒழுங்கில் அதிகரிக்கும்.

நீருடன் தாக்கத்தினால் உண்டாகும் விளைபொருட்கள் மூலத்தன்மை உடையவை. இவற்றின் மூலவியல்பு மேல் இருந்து கீழே வர அதிகரிக்கும்.

பெரிலியம் ஐதரொட்சைட்டு ஈரியல்புடையதாகும். Mg நீரில் கரையாது. Ca, Ba, Sr ஆகியவற்றின் ஐதரொட்சைட்டுகளின் கரைதிறன் அவ்வொழுங்கில் அதிகரிக்கும். கல்சியம் ஐரொட்சைட்டின் கரைதிறன் மிகச் சிறிதாகும். இச்சேர்வைகளின் மூலவியல்பு தரப்பட்ட ஒழுங்கில் அதிகரிக்கும்.

குறிப்பு I : நீரில் கரையும் மூலகங்களை காரங்கள் என்று அழைப்போம். ஆகவே மூலவியல்புகள் என்பதற்கு பதிலாக காரவியல்பு என்றும் உபயோகிக்கலாம்.

குறிப்பு II : $Be(OH)_2$ பெரிலியம் நீருடன் நேரடியாகத் தாக்கம் புரிவதில்லை. பெரிலிய உப்புக்களின் கரைசல்களுக்கு அமோனியாக் கரைசலை சேர்ப்பதனால் பெரிலியம் ஐதரொட்சைட்டு வீழ்படிவாகக் கிடைக்கும்.

**உ-ம் :** $BeSO_4 + 2NH_4OH \longrightarrow Be(OH)_2\downarrow + (NH_4)_2SO_4$

இது அமிலங்களிலும் காரங்களிலும் கரைந்து உப்புக்களையும், நீரையும் தரும்.

## வளியுடன் முதலாம், இரண்டாம் தொகுதி மூலகங்களின் தாக்கம்

**A கார உலோகங்கள்** : முதலாம் தொகுதி

(1) இலிதியம் உலர்ந்த வளியினால் பாதிக்கப்படுவதில்லை. ஈரலிப்பான வளியில் அது இலகுவில் ஒட்சியேற்றப்படுகிறது. வளியில் 180$^{0}$C க்கு மேல் வெப்பமேற்றப்பட்டால் இது எரிந்து இலிதியம் ஒட்சைட்டையும் இலிதியம் நைத்திரைட்டையும் தரும்.

$$4Li + O_2 \longrightarrow 2\,Li_2O \text{ (இலிதியம் ஒரொட்சைட்)}$$
$$6Li + N_2 \longrightarrow 2Li_3N \text{ (இலிதியம் நைத்திரைட்டு)}$$

(2) சோடியமும் ஈரலிப்பான வளியில் தாக்கம் புரிவதால் அதன் புதிய வெள்ளிபோன்ற பளபளப்பான மேற்பரப்பு மங்கி விடுகின்றது. இத் தாக்கங்களில் சோடியம் ஒட்சைட்டு, ஐதரொட்சைட்டு, காபனேற்று ஆகியவை உருவாகின்றன.

$$4Na + O_2 = 2\,Na_2O$$
$$2\,Na_2O + 2\,H_2O = 4\,NaOH$$
$$4\,NaOH + 2Co_2 = 2Na_2Co_3 + 2H_2O$$

வளியில் சோடியம் எரிக்கப்பட்டால் அது வீறாக எரிந்து ஓர் ஒட்சைட்டு, சோடியம் ஒட்சைட்டு ஆகிய சேர்வைகள் உருவாகின்றன.

$$4\,Na + O_2 = 2\,Na_2O$$
$$2\,Na + O_2 = Na_2O_2$$

3) பொற்றாசியம், உருபீடியம், சீசியம் ஆகியவற்றின் தாக்கங்கள் சோடியத்தின் தாக்கத்தை ஒத்தது. ஆனால் இங்கு தரப்பட்டுள்ள ஒழுங்கில் வீறு கூடிய தாக்கங்களாகும்.

**B காரமண் உலோகங்கள்** : இரண்டாம் தொகுதி

(1) பெரிலியம் உலர்ந்த வளியால் பாதிக்கப்படவில்லை. ஆனால் ஈரலிப்பான வளியில் மிகவும் மந்தமாகத் தாக்கம் புரியும். ஒட்சிசனில் வெப்பமேற்றினாலும் உலோக மேற்படை மட்டும் பெரிலியம் ஒட்சைட்டாக BeO ஒட்சியேற்றப்படும்.

$$2Be + O_2 = 2BeO$$

ஆனால் பெரிலியத்தூளை 1200$^{0}$ C க்கு வெப்பமேற்றினால் பிரகாசமான சுவாலையுடன் எரியும்.

(2) மக்னீசியம் உலர்ந்த வளியினால் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் ஈரலிப்பான வளியில் அதன் மேற்பரப்பில் மக்னீசியம் ஒட்சைட்டு ஒரே வெண்படையாகப் படிகிறது. மக்னீசியம் வளியில் எரிக்கப்பட்டால் கண்ணைப் பறிக்கும் பிரகாசமான கழி ஊதாக்கதிர்கள் நிறைந்த சுவாலையுடன் எரியும். மக்னீசியம் வளியில் எரியும்போது ஒட்சைட்டு உண்டாவதுடன் மக்னீசியம் நைத்திரைட்டும் உண்டாகின்றது.

$$2Mg + O_2 = 2\,MgO$$
$$3Mg + N_2 = Mg_3N_2$$

எரியும் மக்னீசியம் தொடர்ந்து காபனீரொட்சைட்டு வாயுவிலும் எரியும். இதனால் இது தொழிற்பாடு கூடிய மூலகம் என்பதை அறிகிறோம்.

$$2Mg + CO_2 \longrightarrow 2MgO + C$$

3) கல்சியம், பேரியம், துரத்தியம், வளியுடன் இவற்றின் தாக்கங்கள் மக்னீசியத்தைப் போன்று இருக்கும் தொழிற்பாடு மேலே தரப்பட்ட ஒழுங்கில் அதிகரிக்கும்.

4) றேடியம் என்பது கதிர்த் தொழிற்பாடுடைய மூலகமாகும். தீவிரத் தொழிற்பாடுடைய மூலகமிது. வளியுடன் தொடர்புற்ற மாத்திரத்தில் தாக்கமுற்று கறுக்கும். றேடியம் நைத்திரைட்டு கரிய நிறமான சேர்வையாகும்.

வளியுடனும் நீருடனும் நிகழும் தாக்கங்கள் இரு தொகுதிகளிலும் ஒரு பாங்கில் அமைந்திருப்பதை அவதானிக்கிறோம். வளியுடன் ஒட்சைட்டும், நீருடன் ஐதரொட்சைட்டும் ஐதரசனும் உண்டாகின்றன. ஒவ்வொரு தொகுதியிலும் தாக்கவீதம் மேல் இருந்து கீழ் அதிகரிப்பதையும் அவதானிக்கின்றோம்.

$$\left.\begin{matrix} M \longrightarrow M^{+} + 2e \\ M \longrightarrow M^{2+} + 2e \end{matrix}\right\} \text{ M உலோகத்தைக் குறிக்கின்றது.}$$

என்ற தாக்கங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தாக்க வீதம் மேல் இருந்து கீழ் ஒழுங்கில் அதிகரிப்பதற்கான காரணங்கள் பாட ஆரம்பத்தில் விளக்கப்பட்டன.

## கார உலோகங்களையும் கார மண் உலோகங்களையும் களஞ்சியப்படுத்தல்

இம் மூலகங்கள் தாக்கவீதம் கூடியவை. இவை வளியுடனும் நீருடனும் தாக்கமுறுவதால் இவற்றை வளியுடன் தொடர்பாக களஞ்சியப்படுத்துவது முடியாது. இதன் காரணமாகத்தான் சோடியம், பெற்றாசியம், கல்சியம் போன்ற தொழிற்பாடு கூடியமூலகங்கள் ஆய்வுகூடத்தில் மண்ணெண்ணெயில் வைக்கப்படுகின்றன.

(தொடரும்...)

# பாகிஸ்தான் செயல் மன்னிக்க முடியாதது; இந்திய இராணுவ தளபதி குற்றச்சாட்டு



(டில்லி)

இந்தியா - பாகிஸ்தான் எல்லைக்கோட்டுப் பகுதியில் காவல் பணியில் இருந்த 2 இந்திய வீரர்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி நுழைந்து சுட்டுக்கொன்றனர். அவர்களின் தலைகளையும் துண்டித்து தங்களுடன் கொண்டு சென்றுவிட்டனர். இச்சம்பவம் இந்திய மக்களின் கடும் கண்டனத்திற்குள் இலக்காகி உள்ளது. இதுகுறித்து இந்திய இராணுவத் தளபதி பிக்ரம்சிங் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார்.

இதுகுறித்து அவர் கூறிய தாவது,

பாகிஸ்தான் இராணுவம் கூறுவது போல், 6ஆம் திகதி இந்திய இராணுவத்தினர் எந்த தாக்குதல் நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். பாகிஸ்தான் இராணுவம் திட்டமிட்டே இந்திய வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இந்திய எல்லையில் 2 வீரர்களை பாகிஸ்தான் இராணுவம் கொடூரமாக கொன்றதை ஏற்க முடியாது. துண்டிக்கப்பட்ட ஹேமராஜின் தலையை மீட்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும். பாகிஸ்தான் செயல் மன்னிக்க முடியாது. சரியான நேரத்தில் சரியான இடத்தில் பதிலடி கொடுக்க இந்தியாவுக்கும் உரிமை உண்டு. இவ்வாறு அவர் கூறினார். இந்நிலையில் பாக்கிஸ்தான் இராணுவத்தினரின் இந்தக் கொடூர நடவடிக்கைக்கு, மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்தது.

இதன் பின்னும், இந்திய வீரர்கள் மீது, தொடர்ந்து பீரங்கிகளாலும், ராக்கெட்டுகளாலும், பாக்கிஸ்தான் இராணுவத்தினர், தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தியாவை பாக்கிஸ்தான் சீண்டும் போதெல்லாம், அதைப் பயன்படுத்தி, பயங்கரவாதிகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவ பெரும் முயற்சி எடுப்பர். தற்போது, எல்லையில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்ட நிலையில், பாக்கிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரில் இருந்து, 2,500 பயங்கரவாதிகள், இந்திய பகுதிக்குள் ஊடுருவ காத்திருக்கின்றனர் என, புலனாய்வு நிறுவனங்கள் எச்சரித்து உள்ளன.

ஊடுருவல் முயற்சிகள் நடக்கும் போதெல்லாம், பாக்கிஸ்தான், இராணுவம் பெரும் உதவி புரிந்துள்ளது. பயங்கரவாதிகள் ஊடுருவலில் ஈடுபடும் போது, அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது போல், இந்திய நிலைகளை நோக்கி, பாக்கிஸ்தான் படைகள் ராக்கெட் தாக்குதலை நடத்தும்.

தற்போது, எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில்; ஊடுருவல் செய்ய பயங்கரவாதிகள் காத்திருப்பதாக, புலனாய்வுத்துறை எச்சரிக்கை செய்துள்ளதால், இராணுவம் உஷார்படுத்தப்பட்டு உள்ளது.

## இந்தியச் செய்திகள்

# காற்று இல்லாமல் மின்சாரம் தயாரிப்பு கிராமத்து இளைஞரின் கண்டுபிடிப்பு

(சேலம்)

காற்று இருந்தால்தான், காற்றாலை இயங்கும். காற்று இல்லாமலே தன்னால் காற்றாலையை இயக்கி மின்சாரம் தயாரிக்க முடியும், என, பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ள கிராமத்து இளைஞர் கூறுகிறார்.

சேலம் மாவட்டம், ஜலகண்டாபுரத்தை சேர்ந்த விசைத்தறிச் தொழிலாளி விஸ்வநாதன், இவர், பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். காற்றாலையை, காற்று இல்லாமல் இயக்க முடியும் என்பதை, இவர், சமீபத்தில் கண்டுபிடித்துள்ளார். தான் கண்டுபிடித்த தொழில் நுட்பத்தை, சென்னை கிண்டியில், மத்திய அரசுக்கு சொந்தமான காப்புரிமை நிறுவனத்தில் பதிவு செய்து,



காற்றாலை செயல்படுவது குறித்து விளக்கமளித்துள்ளார்.

இதற்காக, இவர் காப்புரிமை பெற்றுள்ளார். காற்று இருந்தால் தான், காற்றாலை இயங்கும். காற்று இல்லாமலே தன்னால் காற்றாலையை இயக்க முடியும் என, பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்த கிராமத்து விசைத்தறி தொழிலாளியான இளைஞன் கூறுகிறார்.

# பாலியல் பலாத்கார சம்பவம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது



(டில்லி)

டில்லியில் நடந்த பாலியல் பலாத்கார சம்பவம், அனைத்துத் தரப்பினரிடமும், ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவிக்கு ஆதரவாக, பொதுமக்கள் நடத்திய போராட்டம், பொலிஸ், அரசியல்வாதிகள், அதிகாரிகள் உள்ளிட்டோருக்கு, ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது என, டில்லி முதல்வர் ஷீலா தீட்ஷித் கூறியுள்ளார்.

டில்லி முதல்வரும், காங்கிரஸ்கட்சி மூத்த தலைவருமான, ஷீலா தீடஷித், தனியார், 'டிவி' அலைவரிசைக்கு அளித்த பேட்டியில், மருத்துவக் கல்லூரி மாணவி பாலியல் பலாத்காரத்தால் உயிரிழந்த சம்பவம், அனைத்துத் தரப்பினருக்கும், ஒரு பாடத்தை கற்றுக்கொடுத்துள்ளது. இது போன்ற சம்பவங்களால், பாதிக்கப்படுவோருக்கு, உதவுவதற்கு, பொதுமக்கள் தரப்பில் தயக்கம் உள்ளது. பொலிஸார், தங்களை துன்புறுத்துவரோ என்ற பயமே, இதற்குக் காரணம். எனவே, பொலிஸார், தங்களின் அணுகுமுறையையும், தங்களின் செயற்பாடுகளையும் மாற்ற வேண்டும். பொலிஸார், ஜென்டில்மேன்களாக செயற்பட வேண்டும்.

டில்லி சம்பவத்தில், பொலிஸாரின் தவறு என்ன என்பது குறித்து, எனக்கு எதுவும் தெரியாது. ஏனென்றால், டில்லி பொலிஸ்துறை, உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. டில்லியில் பொலிஸ் கமிஷனரை நியமிப்பதோ, நீக்குவதோ, முதல்வரின் வேலை இல்லை. உள்துறை அமைச்சகம் தான், இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.இந்த விவகாரத்தில், அரசு தரப்பில் விரைவாக நடவடிக்கை எடுக்கவில்லை என, கூறப்படுவதை ஏற்க மாட்டேன். இது குறித்து விசாரிப்பதற்காக, விரைவு நீதிமன்றம் அமைத்தது, நீதிபதி வர்மா தலைமையில், விசா ரணை கமிஷன் அமைக்கப்பட்டது, ஆகிய நடவடிக்கைகளை, அரசு விரைவாக எடுத்தது.

முன்னதாக, அதாவது, பாலியல் பலாத்காரம் நடந்ததுமே, நாட்டு மக்களுக்கு, பிரதமர் உரையாற்றியிருந்தால், நன்றாக இருந்திருக்கலாம். எந்த ஒரு தவறு நடந்தாலும், உடனடியாக, அரசியல்வாதிகள் மீது தான், குற்றம் சாட்டுகின்றனர். இவ்வாறு ஷீலா தீட்ஷித் பேசினார்.

முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பெயர்: சா. தஷானிக்கா
இல. 81 சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

அகவை 03 இல்

முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பெயர்: தே. இந்துசா
M.O.H. வீதி,
ஜெயபுரம்.

அகவை 06 இல்

## வாழ்க வளமுடன்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள்கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

சிறாரின் பெயர்: ..............................

முகவரி ..............................

பிறந்த ஆண்டு: ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..............................

பெற்றோர் கையொப்பம்

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

## டில்லி...

ஆனால் அதற்கெதிரான கண்டனங்களோ விழிப்புணர்வோ அரிதாகவே காணப்படுகிறது. ஊடகங்களில் அது வெறும் செய்தியாகவே வந்து போகிறது. இந்த நிலை மாற வேண்டும்.

கருத்துக்கள் விவாதங்களுக்கான களம் இடைவெளி உருவாக்கப்படவேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதாக அல்லாமல் நுகர்வு கலாசாரத்திற்குத் தீனி போடுவதாகவே பெருமளவு ஊடகங்கள் செயற்படுகின்றன. குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் பாலியல் வன்கொடுமைகள் ஏராளமாக நோந்திருக்கின்றன. குடும்பங்களுக்குள்ளும் உறவுகள், நட்பு எங்கும் இது வியாபித்திருக்கிறது.


அரச படை, வேற்று மத, இனத்தை சோந்தவர்களால் நேரும்போது மட்டும்தான் இங்கு பரபரப்பு ஏற்படுகிறது. உடனடியாக உணர்ச்சி வசப்படுகிறார்கள் பின்னர் எல்லாம் வழமை போல.

## பொங்கலை மட்டும் கொண்டாடும் கிராமம்

செஞ்சி அடுத்த மேல்மலையனூரில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது செக்கடிகுப்பம் கிராமம். இங்கு 160 வீடுகள் உள்ளது. 1200 பேர் வசிக்கின்றனர். விவசாயம் மட்டுமே இவர்களுக்கு தொழில். கடந்த 50 ஆண்டுகளுக்கு மேல் பொங்கல் திருநாளை மட்டுமே கொண்டாடி வருகிறார்கள். தீபாவளி உள்ளிட்ட விழாக்களை இவர்கள் நினைத்துக்கூடப் பார்ப்பது இல்லை. திருமண வைபவங்கள் கூட நடந்தால் அதற்காக ஒதுக்கப்பட்ட ராவணேஅசுரன் நினைவு மண்டபத்தில் தமிழ் முறைப்படி தான் நடக்கும். புரோகிதர்களை அழைப்பது கிடையாது. பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயர்களையே சூட்டுவர்.

தமிழ் பண்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வரும் கிராம மக்கள் தங்களது குழந்தைகளையும் அதன் நெறி தவறாமல் வளர்த்து வருகின்றனர். அதற்காக ஒன்று முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழ மொழியில் தமிழ் தொடக்க கல்வி உருவாக்கி நடத்தி வருகின்றனர்.

# மாலியில் சண்டை தீவிரம்
# பிரான்ஸ் படையினர் விரைவு





ஆபிரிக்காவில் உள்ள மாலி நாட்டின் வடபகுதியில் அல் கொய்தா தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். மாலி நாட்டின் கோன்னா என்ற முக்கிய நகரை தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளார். இவர்களை விரட்டியடிக்க பிரான்ஸ் நாட்டு இராணுவம் விரைந்துள்ளது.

இவர்கள், அந்நாட்டு இராணுவத்துடன் சேர்ந்து தீவிரவாதிகளின் இலக்குகள் மீது போர் விமானங்கள் மூலம் குண்டு வீசின. இத்தாக்குதலில் 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

மாலி இராணுவத் தரப்பில் 10 பேர் பலியாகியுள்ளனர். 60இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதற்கிடையே மாலி சண்டை நிலவரம் குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி பிராங் கோய்ஸ் ஹோலண்டே, இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது பிரான்ஸ் இராணுவத்துக்கு உதவ விமானங்களை அனுப்ப உறுதி அளித்தார். அதைத் தொடர்ந்து வீரர்கள் மற்றும் இராணுவ தளபாடங்களை எடுத்து செல்ல இங்கிலாந்து விமானங்கள் விரைகின்றன.

சண்டை நிலவரம் குறித்து மாலி இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில், தீவிரவாதிகளிடம் இருந்து கோன்னா நகரின் பெரும்பகுதியை மீட்டு விட்டோம். மீதமுள்ள சில இடங்களையும் விரைவில் கைப்பற்றுவோம் எனத் தெரிவித்தார்.

## உயிருக்கு போராடும் வெனிசுவெலா ஜனாதிபதி



வெனிவெலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் உயிருக்கு போராடி வருவதாக முன்னாள் துணை ஜனாதிபதி எலியாஸ் ஜாவ்வா தெரிவித்துள்ளார்.


புற்றுநோயால் அவதிப்பட்டு வரும் வெனிவெலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் (வயது 58) தற்போது கியூபாவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அங்குள்ள ஹவானா மருத்துவமனையில் அவருக்கு கடந்த டிசம்பர் மாதம் 11ஆம் திகதி அறுவைசிகிச்சை நடந்தது. சுமார் ஒருமாத காலம் ஆகியும் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படாமல் இருக்கிறது.

இதேவேளை சாவேஸ் உயிருக்கு போராடி வருவதாக முன்னாள் துணை ஜனாதிபதி எலியாஸ் ஜாவ்வா தெரிவித்துள்ளார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த சாவேஸ் உடல்நலம் தேறினார். இந்நிலையில் மீண்டும் உடல் நிலை மோசமாகி, கியூபா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தொடர்ந்து உயிருக்கு போராடிவருகிறார் என தெரிவித்துள்ளார்.

## நவீன சொகுசு விமானத்தில் மீண்டும் தொழில்நுட்ப கோளாறு



உலகின் அதிநவீன சொகுசு விமானத்தில் மீண்டும் கோளாறு ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலகின் அதிநவீனசொகுசு விமானமான ஜம்போ டிரீம் லைனர் 787 சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அறிமுகமான சில நாட்களிலேயே தொழில்நுட்ப கோளாறுகள் ஏற்பட்டது, வேகமாக பறக்கும் நேரங்களில் விமானத்தின் ஜன்னல் கண்ணாடிகளில் விரிசல் ஏற்படுவது முதலில் கண்டறியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பாஸ்டன் நகர விமான நிலையத்தில், விமானத்தில் எரிபொருள் கசிவது கண்டறியப்பட்டது. இதனால் சிறு தீ விபத்தும் ஏற்பட்டது.

இதற்கிடையே நேற்று முன்தினம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள நரீடா விமான நிலையத்தில், இந்த விமானம் தரையிறங்கியபோது மீண்டும் எரிபொருள் கசிவு ஏற்பட்டது.

உலகின் பல முக்கிய விமான சேவை நிறுவனங்களின் ஓடர்களை அள்ளிக் குவித்துள்ள போயிங் விமான தயாரிப்பு நிறுவனம் இந்த கோளாறுகளை சரிசெய்வது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

## எகிப்தின் முன்னாள் ஜனாதிபதியின் வழக்கை மறுபரிசீலனை செய்ய அனுமதி



(கெய்ரோ)

எகிப்து அதிபர் முபாரக் வழக்கில் மறுவிசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. எகிப்து நாட்டின் முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சிக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு, பொது மக்கள் ஒன்று திரண்டு போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனையடுத்து அவர் பதவி விலக நேர்ந்தது.

தனது ஆட்சிக்கு எதிராக போராடியவர்களை கொன்று குவித்ததாக முபாரக்கின் மீது குற்றம்சாட்டி நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது. குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. இதனையடுத்து, கெய்ரோ சிறையில் முபாரக் தண்டனை அனுபவித்து வந்தார். சமீபத்தில் கீழே விழுந்த முபாரக்குக்கு நெஞ்சு எலும்புகள் உடைந்து காயம் ஏற்பட்டதால், தற்போது அவர் இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில், முபாரக்கின் மீது நடத்தப்பட்ட விசாரணை நியாயமான முறையில் நடைபெறவில்லை. எனவே, மறு விசாரணை நடத்த வேண்டும் என்று முபாரக் சார்பில் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதி, அஹமத் அலி அப்துல் ரஹ்மான், முபாரக் மீது மறு விசாரணை நடத்த நேற்று முன்தினம் அனுமதி அளித்தார். கடந்த விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை தவிர, புதிய சாட்சிகளை சேர்க்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் மறு விசாரணை நடத்தப்படலாம் என நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

உலகச் செய்திகள்

## மியன்மார் ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தினோம்

### புரட்சியாளர்கள் அறிவிப்பு

மியன்மார் அரசுக்கு சொந்தமான ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தியதாக இராணுவத்திற்கு எதிராக போராடிவரும் புரட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மியன்மாரின் வடக்கு பகுதியில் இராணுவத்தை எதிர்த்து கச்சின் இன புரட்சியாளர்கள் போராடி வருகின்றனர்.

இவர்கள் அனுப்பியுள்ள மின்னஞ்சலில், மியன்மார் அரசுக்கு சொந்தமான ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி மூத்த அரச அதிகாரி ஒருவர் கூறுகையில், கச்சின் இனத்தவர்கள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் எம்.ஐ.-35 ஹெலிகொப்டர் இஞ்சின் கோளாறு காரணமாக வெடித்துச் சிதறியது என்றார்.

தன்னாட்சி அதிகாரம் கோரி, கச்சின் இனத்தவர்கள் அரசுக்கு எதிராக நீண்ட காலமாக போராடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## லண்டன் சிறுமி ஜமைக்காவில் சுட்டுக்கொலை




ஜமைக்காவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் லண்டனை சேர்ந்த இமானி என்ற எட்டு வயது சிறுமி உயிரிழந்தார்.

விடுமுறையை கழிப்பதற்காக ஜமைக்கா சென்றிருந்த இந்த சிறுமி, வர்த்தக அங்காடியின் உள் இருந்த போதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.அங்காடியினுள் இருந்த இருவருக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் அங்காடியில் பொருட்களைப் பெற்றுக் கொண்டிருந்த மக்கள் பகுதியை நோக்கி தாக்குதலை மேற்கொண்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உள்ளான சிறுமி படுகாயமடைந்த நிலையில், மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளை மரணமானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு 14 இராணுவத்தினர் பலி



பாகிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.பாகிஸ்தானின் வடக்கு வஜீரிஸ்தான் மாகாணத்தில் இராணுவ வாகனங்களை குறிவைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் மேலும் 25 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள், வானூர்திகள் மூலம் அருகிலுள்ள மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.சம்பவத்துக்கு எந்த அமைப்பும் இதுவரை உரிமை கோரவில்லை.

# கேப்பாபிலவில் முள்ளுக்கம்பி விநியோகம் மீள்குடியமர்ந்த மக்களுக்கு வாய்ப்பு

(முல்லைத்தீவு)

கேப்பாபிலவில் மீள்குடியமர்ந்த குடும்பங்களில் ஒரு தொகுதியினருக்கு முள்ளுக்கம்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

கேப்பாபிலவில் உள்ள சீனியா மோட்டைப் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள சுமார் 175 குடும்பங்களுக்கே இவ்வாறு நேற்று முள்ளுக்கம்பிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 25 கிலோ முள்ளுக்கம்பியும் 5 தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. இக்குடும்பத்தினருக்கு 40 பேச் காணி ஏற்கனவே வழங்கப்பட்டு அங்கு வீடமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இக்காணிகளுக்கு வேலி போடுவதற்கே இப்போது முள்ளுக்கம்பிகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவும் அவரது அதிகாரிகள் குழுவினரும் கலந்து கொண்டனர். (04)

# முதியோர் இல்லத்தில் வயோதிபர் மரணம்

(திருநெல்வேலி)

கைதடி முதியோர் இல்லத்தில் சுமார் 10 வருடங்களாகத் தங்கியிருந்த யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த இராமலிங்கம் கந்தையா என்னும் 96 வயதுடைய முதியவர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை கைதடி இல்லத்தில் காலமானார்.

பொலிஸ் உத்தியோகத்தராக சிலகாலம் பணியாற்றிய இவர் பின்னர் யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை நிலையத்தில் கடமையாற்றினார். இயலாத கட்டத்தில் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

தான் இறந்த பின்னர் தனது இறுதிக் கிரியைகளை இந்து முறைப்படி செய்தல் வேண்டும் என இவர் ஏற்கனவே தியாகி அறக்கொடை நிலையத்தினரிடம் கேட்டிருந்தார்.

இவரது மரணம் தொடர்பாக அறக்கொடை நிலையத்துக்கு கைதடி இல்லத்தினரால் அறிவிக்கப்பட்டது. முதியவரின் விருப்பத்துக்கு அமைவாக தியாகி அறக்கொடை நிலையத்தினர் இந்து முறைப்படி அவரது இறுதிக்கிரியைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ததன் பேரில் அவரது சடலம் கைதடியில் தகனம் செய்யப்பட்டது. (137)

# சிதைவடையும் வீதியில் துன்பத்தில் மிதக்கும் மக்கள்


(மன்னார்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பல இலட்சம் ரூபா செலவில் கடந்த வருட இறுதியில் வங்காலை பிரதான 'வீதியின் திருத்த வேலைகள் நிறைவடைந்தன.

ஆனால் தற்போது அவ் வீதிகளின் சில இடங்கள் உடைந்த நிலையில் குண்டும் குழியுமாக காட்சியளிப்பதாக பிரதேச வாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இவ்வீதிகளின் திருத்த வேலைகள் நிறைவடைந்து இரு மாதங்கள் மட்டுமே ஆகியுள்ளன. அத்துடன் மழை காலங்களில் நீர் வடிந்து செல்வதற்கான வடிகால் அமைப்பும் சீரற்று காணப்படுகின்றது. இது சம்பந்தமாக உரியவர்களிடம் கேட்ட போது வீதியின் திருத்த வேலைகளுக்குள்ளேயே வடிகாலமைப்பும் காணப்படுகின்றது எனத் தெரியவருகின்றது.

மழை காலங்களில் இவ் இடங்களில் நீர் தேங்கி நிற்பதால் மக்கள் பல இன்னல்களை எதிர் நோக்குகின்றனர். இது சம்மந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கும் படியும் வீதியை புனருத்தாரணம் செய்து தரும் படியாகவும் மக்கள் கேட்டு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



மன்னார் வங்காலை பிரதான வீதியில் பல வருடங்களாக பழுதடைந்த நிலையில் காணப்படும் அதியுயர் மின் பிறப்பாக்கி (ரான்ஸ்போமர்) அதன் உள் பகுதியில் இருந்து பாரிய புகை வெளியேறுகின்றது. திடீர் திடீரென புகை வெளிவருகின்றது. அதனை அவ்வீதியூடாக செல்பவர்கள் பார்வையிடுகின்றதை அவதானிக்க முடிகின்றது.

# வடமராட்சி ஆலய சூழலில் கரைந்து அழியும் கலாசாரம்

வடமராட்சி பிரசித்தி பெற்ற ஆலயங்களின் சூழலில் ஆங்காங்கே காதல் ஜோடிகள் மற்றும் மதுப்பிரியர்கள் சைவசமய பண்பாட்டு விழுமியங்களை அழிக்கும் வகையிலான அநாகரிக செயற்பாடுகளில் 24 மணிநேரமும் ஈடுபட்டு வருகின்றனர்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருத்தலங்களான தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதியான் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் பகல் வேளை காதல் ஜோடிகளும் இரவு வேளைகளில் மதுப்பிரியர்களும் சமய விதிமுறைகளை மீறி சமூகத்திற்கு ஒவ்வாததுமான சில செயற்பாடுகளில் ஈடுபட்டுவருவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

சைவசமயத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் ஆலயத்தின் புனிதத்தன்மையையும் அறிந்த இளம் சமூகத்தவர்கள் காதலர்களாக மாறுவேடம் பூண்டு மேற்படி ஆலயங்களில் நடைபெறும் பூசைகளில் உள்ள முருகி வழிபட்டபின் ஆலயச் சூழலில் ஆட்கள் நடமாட்டமற்ற பகுதிகளான செயலிழந்த மடங்கள் குடிமனைகளுக்கும் பற்றைகளுக்குள்ளும் சென்று அநாகரிக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். (116)

# கொக்குவிலில் கோலாகலம் இன்று மாலை பட்டிப்பொங்கல்



(திருநெல்வேலி)

கொக்குவில் கிழக்கு, கோணாவளை லேனில் உள்ள கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை நடத்தும் பட்டிப்பொங்கல் விழா இன்று மாலை 4.00 மணி முதல் 5.30 மணிவரை பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ இரா.சந்திரசேகர சர்மா (எம்.ஏ.) தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், வாழ்த்துரையை நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான குரு சிவஸ்ரீ கு.குமாரக் குருக்களும் வழங்குவர்.

கோமாதா வழிபாட்டின் முக்கியத்துவம் பற்றி வித்தியா பூஷணம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மாவும், பட்டிப்பொங்கல் பற்றி இந்து அபிவிருத்தி கலாசார உதவி உத்தியோகத்தர் திருமதி மாணிக்கராஜ சர்மா அனந்த லெட்சுமியும் உரைநிகழ்த்துவார்கள். கோமாதா அலங்கார பூஜையும் இடம்பெறும். (137)

## தாய்ப்பால்....

குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 3.00 மணியளவில் குறித்த பெண் குழந்தையின் தாயார் குழந்தைக்கு பாலூட்டியுள்ளார். இதன்போது குழந்தை நித்திரையானதைத் தொடர்ந்து குழந்தையைப் படுக்க வைத்திருக்கிறார்.

பின்னர் அதிகாலை 4.00 மணிக்கு மீண்டும் குழந்தையைப் பார்த்தபோது குழந்தை படுக்கையில் இறந்து காணப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

உடனடியாக குழந்தையைத் தூக்கியபோது குழந்தையின் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் பால் வெளியேறியதாகவும் குழந்தையின் தந்தை தெரிவித்தார்.

குழந்தையின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக நேற்று ஒப்படைக்கப்பட்டிருந்தது. (பா)

## அரசாங்கத்தை...

இருந்தே ஆதரித்து வந்த உள்நாட்டு பத்திரிகைகளும் நீதித்துறை விவகாரத்திற்கு பொறுப்புக் கூறவேண்டும். நீதித்துறை நெருக்கடி பற்றி ஒரு பத்திரிகையேனும் ஆசிரியர் தலையங்கத்தை தீட்டவில்லை. சிங்களப் பத்திரிகை ஒன்று ஆசிரியர்கள் நியமனம் தொடர்பில் ஆசிரியர் தலையங்கத்தை எழுதியிருந்தது.

ஆசிரியர் நியமனத்தில் காணப்படும் பிரச்சினையா நாட்டில் தற்போது இருக்கின்ற பெரும்பிரச்சினை. தனது இந்த குற்றச்சாட்டுக்களுக்கு பத்திரிகை ஆசிரியர் சங்கத்தலைவரும் சகல புதினப் பத்திரிகைகளின் ஆசிரியர்களும் பதிலளிக்கவேண்டும்.

இந்த விடயத்தில் மௌனம் சாதிப்பது தமது குற்றச்சாட்டை ஏற்பதாகும். பத்திரிகை ஆசிரியர்கள் ஜனாதிபதியையும் பாதுகாப்பு செயலாளரையும் எத்தனைமுறை சந்தித்தனர் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்றார்.

## பதவியிலிருந்து...

தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் வாரத்தில் ஷிராணி பண்டார நாயக்க நீதியரசர் குழுத் தலைவராக வழக்கு விசாரணைகளின் போது சமூகமளிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் 15 மற்றும் 17 ஆம் திகதிகளில் இடம் பெறும் வழக்கு விசாரணைகளில் சமூகமளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நீதிமன்ற...

கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை விவகாரம் நிறைவடைந்துள்ளமையினால் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. என்றும் அவ்வாறான பிரச்சினைகளின் போது அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடியதாகவும், அதற்காக அரசியலமைப்பை திருத்துவதாக ஜனாதிபதி கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

## புதிய பிரதம....

நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.சுவாமிநாதன் ஆகியோர் இந்த கவுன்சிலில் இடம் பெற்றுள்ளனர்.

தலைமை நீதியரசர் பொறுப்பில் நியமிக்கப்படுவதற்காக ஜனாதிபதி ஒரு பெயரை சிபாரிசு செய்து தங்களுக்கு அனுப்புவார் என்றும், அதனைத் தாங்கள் பரிசீலித்து ஒப்புதல் வழங்க வேண்டும் என்றும் அஸ்வர் தெரிவித்தார்.

மூன்று பேரின் பெயர்கள் அனுப்பப்பட்டதாக வெளிவந்த ஊடகச் செய்திகள் சரியான தகவல் அல்ல என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கவுன்சில் கூடும்போது எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை என்றாலும், ஏனையோர் சேர்ந்து சிபாரிசுக்குரியவருக்கு ஒப்புதல் வழங்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஊடகங்களில் தெரிவிக்கப்படுவதுபோல மொஹான் பீரிஸின் பெயர் ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று கூறுவதற்கில்லையானாலும், ஜனாதிபதி சிபாரிசு செய்யக்கூடியவராக முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் இருக்கவும் வாய்ப்புண்டு என்று அஸ்வர் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில்...

இருவரையும் ஏற்றிக்கொண்டு கிளிநொச்சி மருத்துவமனையை நோக்கி வேகமாகச் சென்ற பொலிஸாரின் ஜீப் வண்டி கரடிப்போக்கு சந்திக்கு அண்மையாக துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இருவரை மோதித் தள்ளியது. இச்சம்பவத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தார். மற்றவர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்துச் சம்பவத்தில் பெரிய பரந்தன் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் கணேசன் (வயது -36) என்பவர் உயிரிழந்ததுடன், பரந்தன் பகுதியைச் சேர்ந்த செ.காந்தீபன், திருச்செல்வம் கஜேந்திரன் (வயது - 26) மற்றும் சச்சிதானந்தம் காண்டீபன் (வயது - 27) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையிலும், இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் ஒரு பிள்ளையின் தந்தை என்றும் இறந்தவரின் சடலம் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதென்றும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும், கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (77,25)

# ஷிராணி மீதான நடவடிக்கை

# பொதுநலவாய செயலர் ஏமாற்றம்


(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக எடுக்கப்பட்டுவருகின்ற நடவடிக்கைகளையிட்டு தாம் ஏமாற்றமடைந்துள்ளதாக பொதுநலவாய அமையத்தின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா நேற்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொதுநலவாய முன்முயற்சிகள் மற்றும் ஏற்கனவே திட்டமிட்டது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமட்டுமின்றி பொதுநலவாயத்தின் மதிப்புகள், கோட்பாடுகள், அரசியலமைப்பு மீறல்கள் தொடர்பில் பொதுநலவாய அமையம் அறிவுறுத்தியிருந்தது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அமையத்தின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# காலநிலை மாற்றத்தால் வடக்கு பெரும்பாதிப்பு

இலங்கையில் காலநிலை மாற்றத்தினால் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய பல பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

இதன்படி வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களும், அம்பாந்தோட்டை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களும் கூடுதல் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ளதாகப் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பி.வி.ஆர்.புண்ணியவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பாதிப்புக்கள் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சின் விசேட .குழுவொன்று ஆராயவுள்ளது.

விவசாய, சுகாதார, சுற்றாடல், எரிசக்தி போன்ற பல்வேறு துறைகள் ஊடாக காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய முறைகள் கண்டறியப்படுமென கலாநிதி புண்ணியவர்தன குறிப்பிட்டார்.

# சட்டக் கல்லூரிக்குப் புதிய பதிவு ஒருவாரம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை சட்டக்கல்லூரிக்கு 2013 ஆம் வருடத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான பதிவு ஒருவாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சட்டக் கல்லூரி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த பதிவு நடவடிக்கைகள் இன்று மேற்கொள்வதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை சட்டக் கல்லூரிக்கான நுழைவுப் பரீட்சையில் முறைக்கேடுகள் இடம்பெற்றதாக கல்லூரிக்கு முன்பாக கடந்த வாரம் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்தே பதிவு நடவடிக்கைகள் நாளை 15 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பட்டாசு வெடித்ததில் சிறுவன் படுகாயம்



பட்டாசு வெடித்துச் சிதறியதில் சிறுவன் ஒருவன் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் தெற்கு பகுதியிலேயே இந்த சம்பவம் இன்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ச.லக்சாந்தன் (வயது - 16 ) என்ற சிறுவனே பட்டாசு வெடிவிபத்தில் கண்ணில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(25)

# மீனவர்களின் தேசிய மாநாடு அலரிமாளிகையில் அடுத்த வாரம்

தேசிய மீனவர் மகா சம்மேளனத்தின் தேசிய மாநாடு எதிர்வரும் 22 ஆம் திகதி அலரி மாளிகை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி நேற்று தெரிவித்தார். தேசிய மீனவர் மகா சம்மேளனத்தின் தலைவர் அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரட்ன ஏற்பாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

தேசிய மாநாடு தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட திட்டமிடல் குழு தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்குக் கிராமிய மற்றும் மாவட்ட கிராமிய மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்யுமாறும் அவர் மேலும் கூறினார். (25)

# எரிவாயு சிலிண்டர் வெடித்து கணவன், மனைவி காயம்

வவுனியா சமணங்குளப் பகுதியில் நேற்று மதியம் உணவு சமைப்பதற்காக சமையல் எரிவாயு சிலிண்டரை இயக்கிய வேளை, அது வெடித்ததில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கணவன், மனைவி ஆகிய இருவரும் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமணங்குளத்தைச் சேர்ந்த ஸ்ராலின் (வயது -50) அவரது மனைவியுமே எரிகாயங்களுக்கு இலக்கானவர்களாவர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெள்ள அபாயத்தின் பிடியில் மக்கள் குடியிருப்புக்கள்

கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள பன்னங்கண்டி, அம்பாள்நகர் கிராமத்தில் குடியிருக்கும் மக்கள் மழை பெய்யும் காலங்களில் இடம்பெயரும நிலை வருடாவருடம் தொடருகின்றது.

இக் கிராமங்களின் மக்கள் தமக்கு மேட்டுக்காணி குடியிருக கத்தர வேண்டுமென கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதேவேளை தற்போது குடியிருக்கும் காணிகள் தொடர்பாக காணி உறுதியோ உரிமைப் பத்திரங்களோ இவர்கள் வசமில்லை.

அரச காணிகளில் அடாத்தாகக் குடியிருக்கும் இவர்களுக்குப் புதிய காணிகளை வழங்குவது தொடர்பில் பிரதேச செயலரால் உரிய நடவடிக்கை எடுப்பதும் கடினமாக உள்ளது.

கிளிநொச்சியில் இதேபோல வெள்ளப் பாதிப்பை எதிர்நோக்கும் கிராமங்கள் பல உள்ளன. மழை வெள்ளம் வடிந்தோடும் பிரதேசங்களில் குடியிருக்கும் மக்கள் தொகை வருடாவருடம் அதிகரித்து வருகிறது. (90)

# களனி அமைப்பாளராக மேர்வின் வலியுறுத்தி கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவை களனிக் தொகுதியின் அமைப்பாளராக மீண்டும் நியமிக்கும்படி ஜனாதிபதிக்கு வலியுறுத்தி கையெழுத்து வேட்டையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் இணைந்து அப் பகுதியில் இந் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

மேர்வின் சில்வா மிகவும் நல்லவர் என்பதுடன் மிகவும் திறமையானவர். எனவே அவரை உடனடியாக அப்பதவிக்கு நியமிக்கும்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களனிப் பிரதேசத்திற்கான பெண்கள் பிரிவின் தலைவி தமயந்தி பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் எப்போதும் பௌத்த தர்மத்தின் நற்சிந்தனைகளுடனே எமக்கு அறிவுரை கூறுபவர் எனவும் அவர் கொலைகாரர் அல்ல எனவும் தமயந்தி பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

களனிப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் இக் கையெழுத்து வேட்டை இடம்பெற்று வருவதாகவும், இதில் ஏற்கனவே நூற்றுக் கணக்கானோர் கையெழுத்திட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இராணுவத்திலிருந்து 71458 பேர் தப்பியோட்டம்

இராணுவத்தை விட்டு கடந்த ஆண்டில் 71 ஆயிரத்து 458 பேர் தப்பியோடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பணிக்குத் திரும்பத் தவறிய படையினரின் எண்ணிக்கையே 71ஆயிரத்து 458 பேராகும்.

இவர்களில் 33 ஆயிரத்து 532 பேர் இராணுவ நடைமுறைகளின் கீழ், இராணுவத்தை விட்டு நீக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தை விட்டுத் தப்பியோடியுள்ள படையினரைத் தேடிப் பிடித்துக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.



# சட்டத்துறை அடிபணிந்தால் கிடைக்காது நிவாரணம்

## சட்டத்தரணி லால் தெரிவிப்பு

(கொழும்பு)

நீதித்துறை சுயாதீனமாகவே இயங்கவேண்டும். அதன் செயற்பாடுகளில் நிறைவேற்றுத்துறை தலையிடும் வகையில் சட்டத்துறையும் நிறைவேற்றுத்துறையின் கீழ் அடிபணிந்தால், மக்களுக்கு நீதிமன்றங்களில் இருந்து எவ்விதமான நிவாரணமும் கிடைக்காது என்று சட்டத்தரணி லால் விஜயநாயக்க தெரிவித்தார்.

நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சட்டத்துறையை பாதுகாப்பதற்காக நாம் இவ்வளவு நாளாகவும் போராடிக்கொண்டிருந்தோம். எதிர்வரும் காலங்களில் இந்தப் போராட்டத்தை மாற்று வடிவத்தில் முன்னெடுக்கப் போகின்றோம்.

இந்தப் போராட்டத்தில் மக்களும் இணைந்துகொள்ள வேண்டும். நீதித்துறையானது நிறைவேற்றுத்துறையின் கீழ் அடிபணிந்து விட்டால் மக்களுக்கு எவ்விதமான நிவாரணமும் கிடைக்காது.

இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் நீதவான் நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்பைக் கூட மாற்றி எழுதும் அளவிற்கு பிரதேச அரசியல்வாதிகள் தங்களுடைய அதிகாரங்களை கையில் எடுத்துக்கொள்வர். இவ்வாறான நிலைமை ஏற்பட்டால் அது நாட்டு மக்களுக்கே ஆபத்தாக மாறிவிடும் எனத் தெரிவித்தார்.

# கந்தானை இளைஞருக்கு கட்டாரில் மரண தண்டனை

(கொழும்பு)

கட்டார் நாட்டில் இலங்கை வெளிநாட்டுப் பணியாளர் ஒருவர் மரண தண்டனையை எதிர்நோக்கி உள்ளதாகக் கொழும்பில் உள்ள அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பை அடுத்துள்ள கந்தானையைச் சேர்ந்த வெங்கடாச்சலம் சுதேஸ்கர் என்னும் இளைஞரே, இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஒருவரைக் கொன்றதான குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்.

பழக்கடை ஒன்றில் பணியாற்றிய தனது மகனுக்கும் கேரளாவைச் சேர்ந்த ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில், கேரள நபரை தனது மகன் கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டதாகக் கூறி, அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகச் சுதேஸ்கரின் தாயாரான வெங்கடாச்சலம் பூங்கோதை பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

அதேவேளை, இறந்துபோனவரின் குடும்பத்தவருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து, 35 இலட்சம் இலங்கைப் பணம் “இரத்தப் பணமாக” வழங்கப்பட்டால், தனது மகனை மன்னிப்பதாக உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகவும், ஆனாலும், அதற்கான பணத்தை சேர்ப்பதற்காக தம்மால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு இதுவரை வெற்றி கிடைக்கவில்லை என்றும் பூங்கோதை கூறினார்.

அரசாங்கத்திடம் தான் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.